உ

முருகன் துணை.

விவேகபானு

ஒரு இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

ஆசிரியன்:—எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" "உத்தமனாயிரு"

மாலை-க. | விபவ௵ ஆவணி௴ 1928௵ ஆகஸ்டு, செப்டம்பர்௴ | மலர்-ச

கடவுள் வணக்கம்

வள்ளலுனை யுள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதியென்னி னவரை யொருகனவின்
மாட்டினு மறந்து மதியேன்
கள்ளமறு முள்ளமுறு நின்பதம லால்வேறு
கடவுளர் பதத்தை யவரென்
கண்ணெதி ரடுத்தைய நண்ணென வளிப்பினுங்
கடுவென வெறுத்து நிற்பேன்
எள்ளளவு மிம்மொழியி லேல்சுமொழி யன்றுண்மை
என்னையாண் டருள் புரிகுவாய்
என்றந்தை யேயெனது தாயேயெ னின்பமே
என்றனறி வேயெ னன்பே
தள்ளரிய சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

ஒற்றுமைக்குத் தடை

(மு. மா.)

நேரிசை வெண்பா

1 அப்பன்றன் பிள்ளையுட னண்ணன்றன் றம்பியுடன்
செப்பரிய தாயுந்தன் செல்வியுடன்—எப்பொழுதுந்
தீராத சண்டை திகழ்ந்துவரி னொற்றுமைமேற்
றூராள மாகுமோ தான்.

2 மூத்தோர் முதற்சிறுவர் மூர்க்கஞ்செய் வார்த்தைகளால்
ஆத்தாண் முதலா யனைவரையு—நாத்தழும்ப
வீண்சண்டை தர்க்கம் விளைத்திடு மிந்நாளிற்
காண்குனுமோ வொற்றுமையுங் கண்.

3 காணப் படுங்குற்றங் கண்டுங்கா ணாதவர்போன்
மாண மறைத்துமிக வந்தாலுங்—காணுமொரு
பேரொற்று மையிலையா பின்னும் பலவிகற்பம்
நேருமிதற் கென்செய்வா நேர்.

4 நாய்போற் பிறரை நலிவிக்கு முள்ளத்தோர்
காய்முகங் கொண்டு கடுகடுப்பாய்ப்—பேய்போலே
பெருகிவருங் காலமிதிற் பேசருநல் லொற்றுமைதான்
பெருகிடுமோ வென்றென்றும் பேசு.

5 பொய்யாற் கொலையாற் புலைத்தொழிலால் வஞ்சனையால்
மெய்யாம் பெரியோரை வீழ்த்திவரும்—பொய்யர்நிறை
பொல்லாத காலமிதிற் போற்றிடுநல் லொற்றுமைதான்
வெல்லுங் கதியுண்டோ வீண்.

6 சாதி மதச்சண்டை சாற்றுங் கலைச்சண்டை
யோதுந் தெருச்சண்டை யோய்வறவே—நீதிமுனம்
நாளும் பெருகிவர நாட்டங் கொண்டாரிடத்தோ
ஆளும்பொன் ஒற்றுமை யாம்.

தாய்மொழி

இன்றி யாம் எழுதப்புக்கது தாய்மொழி என்னும் வியாசமாம். இக்கட்டுரைக்கண் கூறப்புகும் கருத்துக்களை ஆன்றோர் ஆய்ந்துணர்ந்து கடைப்பிடிப்பரேல், அது நாம் எய்திய பயனென் றெண்ணப்படும்.

தாய்மொழி

'தாய்மொழி' என்னுஞ் சொற்குப் பலர் பலவாறாகப் பொருள் கூறுவர். தாயமொழி என்பது தாய்மொழி என்று மருவிற்றென்றும், அதன் பொருள் உரிமையான மொழி என்றும் சிலர் கூறுவர். அப்பொருள் பொருத்தமுடைத்தன்று என்பது ஆராய்வார்க்கு நன்கு புலனாம். தாய்மொழியாவது தாயினால் கற்பிக்கப்பட்ட மொழி என்பதே பொருளாம். ஒரு குழவி பிறந்தவுடன் அதனைப் போற்றி வளர்க்குங் கடப்பாடு தந்தையினும் தாய்க்கு மிகவுளது. அக்குழவி நாளடைவில் பாராட்டப்பெற்று மொழிவுணர்ச்சிபெற்று வருவதும் அத்தாயினாலேயே. இன்னும் தாய்மார் தமது செல்வக் குழவிகளைக் கையில் வைத்துப் பாராட்டி சீராட்டிப் பாலூட்டி அம்மா! அப்பா! மாமா! என்பன போன்ற சொற்களை அக்குழவிகட்குக் கற்பித்து வருவது வழக்கிலிருப்பதை எல்லோரு முணர்வர். ஆகலான், தாய்மொழி என்பது தாயினால் கற்பிக்கப்பட்ட மொழியென்பதே பொருளென்றுணர்க. தாய்மார் தமது குழவிகட்குப் பயிற்றுவது தாம் தமது தாய்மாரிடத்திருந்து கற்றமொழியை யாமென்பது அனைவரும் அறிந்ததே. எனவே, முன்னையோரால் தனக்குக் கற்பிக்கப்பட்ட மொழியே தாய் தனது குழவிகட்குங் கற்பிப்பதனால் அம்மொழி தொன்று தொட்டு அவள் குலத்தார்க்கு உரிமைப்பட்ட மொழியென்பது பெற்றாம். எனவே, அம்

மொழியைத் தாய்வழிக் கற்கின்ற புதல்வர்கட்கும் அஃது தொன்று தொட்டே உரிமையான மொழியாயிற்று. இதனானே தாய்மொழி என்பதற்கு உரிமையான மொழி என்னும் பொருட்டோன்றிற்றே யன்றித் 'தாய்மொழி'யைத் தாயமொழி என்று மாற்றுவதனாலன்று என்பதுணர்க.

தமிழ்

நிற்க, நம் தாய்மொழியாவது தெய்வீகம் வாய்ந்த தமிழ் மொழியாம். தமிழ் ஆரியம் என்னும் இருமொழிகளும் சிறப்புடையன. இவை இரண்டும் எக்காலத்து யாரால் தோற்றுவிக்கப்பட்டன வென்பது இதுகாறும் அறியப்படவில்லை. அன்றியும் ஒரு மொழி தோன்றிய பின்பு இஃது இன்னரால் தோற்றுவிக்கப்பட்டது என்பது மரபு மன்று. என்னையெனில் நூல்களைப் போன்று மொழிகள் ஒருவரால் இயற்றப்படுவனவல்ல. ஒருசார்பினரால் கையாளப்பட்டு நிலவினாலன்றி எம்மொழியும் உலகி னிலையாது. எனவே, ஒரு மொழி தோன்றி வழங்குதற்கு அதை வழங்கும் கூட்டத்தினர் எல்லாரும் காரணராவார். ஆயினும், அறிவிற்சிறந்த சிலராலே ஒரு மொழி முதன் முதற் றோற்றுவிக்கப்படல் வேண்டும் என்பது மட்டும் கைக்கொள்ளத்தக்கது. இவ்வாற்றானாயுமிடத்து நமது தமிழ்மொழி எவ்விடத்து அறிவிற் சிறந்தாரால் தோற்றுவிக்கப்பட்டது எனவினவின், நந்தமிழ் இறைவ னானும், தமிழ்நாட்டுச் சான்றோரானும் தோற்றுவிக்கப்பட்ட தென்பது விடையாம். அச்சான்றோர் இன்னரென்பது நம்போன்ற தற்காலத்தார்க்கெவ்வாற்றானும் புலப்படுவதன்று. என்னை? தமிழ் தோன்றிய காலம் இஃதென அறியப்பட்டிலதாகலின்.

தலைச்சங்கம்

நம் தமிழ் தோன்றிய காலம் இஃதென வரையறுத்துக் கூறத்தக்க எடுத்துக் காட்டுகள் இலவேனும், தலைச்சங்கம் ஏற்படுவதன் முன்னரே தமிழ் நிலவிற்று என்பது மட்டும் உணரக்கிடக்கின்றது. தமிழ்ச் சங்கங்கள் மூன்று. அவையாவன; தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பனவாம். தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும், இறையனாரும், முருகவேளும், நிதிக்கிழவனும், முரஞ்சியூர் முடிநாகராயரும் என்றித் தொடக்கத்தினர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடின ரென்ப, அவர்களான் பாடப்பட்டன பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்றித் தொடக்கத்தின,

அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதியாண்டு. அவர்க்கு இலக்கணம் அகத்திய மென்ப.

இடைச் சங்கம்

இடைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசையாரும், வெள்ளூர்காப்பியனாரும், சிறு பாண்டரங்கனும், மதுரை யாசிரியன் மாறனும், துவரைக்கோமானும் என்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடின ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலிகுருகு, வெண்டாளி, வியாழமாலையகவல், என்றித் தொடக்கத்தனவாம். அவர்க்கு நூல் அகத்தியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், தொல்காப்பியமும், பனம்பாரமுமாம். அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தார். அவர் சங்க மிருந்தது கபாடபுரம். அக்கால் மதுரை கடல் கொள்ளப்பட்டது.

கடைச்சங்கம்

கடைச்சங்க மிருந்தார் கபிலரும், பாணரும், சிறுமேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர்க்கிழாரும், இளந்திரு மாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும். மருதனின நாகனாரும், நக்கீரனாரும் என்றித் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினார். அவர்களாற் பாடப்பட்டன குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம் கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை, பரிபாடல், பாரத வெண்பா என வித்தொடக்கத்தின. அக்காலத்து நூல் அகத்தியமும், தொல்காப்பியமுமாம். அவர் ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு தமிழாராய்ந்தாரென்ப.

சங்ககாலத்தின் பின்னைய நிலைமை

கடைச்சங்கங்கத்தின் பின்னர் சிறப்பான தமிழ்ச்சங்கங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. கிளைச்சங்கங்கள் பல ஏற்பட்டிருத்தல் கூடு மேனும் அவையெல்லாம் ஏனை முச்சங்கங்களைப் போன்று பயன்பட்டிரா. பின்னர் பொய்யாமொழிப் புலவர் ஒரு சங்கம் நிறுவித் தமிழின் பண்டைச் சிறப்பைக் கொணர்தல் வேண்டுமென்று அதன்பொருட்டு முயன்றறென்ப. அம்முயற்சி முடிவுபோயிற்றில்லை.

தமிழ் நூல்கள்

இதுகாறும் ஆராய்ந்தவாற்றான் நம் தமிழ்மொழி முற்காலத்து மூச்சங்கத்தாரால் பெரிதும் பேணப்பட்டுச் சிறப்புற்று வந்தது என்

பது புலனாயிற்று. அக்காலத்துத் தமிழில் வசன இலக்கியங்கள் வழக்கில் இல. நமக்குக் கிடைத்துள்ள பழைய நூல்கள் முற்றும் யாப்பானியற்றப்பட்டனவே. அவையும் சொன்னயம், பொருணயம், முதலியவற்றிற் சிறந்து மிகக் கற்றோர்க்கே பயன் படுவனவா யுள்ளன. இதனான் முன்னைத் தமிழ்ப் பயிற்சி எத்தன்மைத்து என்பது உணரப்படும். தமிழ் மொழிக்கண்ணுள்ள நூல்கள் இவை யென்பதும், இத்துணையென்பதும் வரையறுத்துரைக்க வியலாதன. தலைச்சங்கத்தின் முன்னரே தமிழ் இருந்ததாகலின், அக்காலத்தும் சிறந்த நூல்கள் இருந்திருத்தல் வேண்டும். அந்நூல்கள் இவை யென்பது இக்காலத்து அறிதலரிதாயிற்று. சங்ககாலத்துச் சிறந்த நூல்கள் இவை யென்பது முன்னர்க் கூறப்பட்டன. தற்போது நமக்குக்கிடைத்துள்ளன அகத்தியத்திற் சில பகுதிகளும், தொல்காப்பியமும், பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், கீழ்க்கணக்கு நூல்களும் ஏனைச்சில இலக்கிய நூல்களுமேயாம். இவற்றால் தண்டமிழ் வல்ல பண்டைப் புலவோருடைய கல்வித்திறன் நன்கு விளங்குகின்றது.

நூற்பொருள்

நமது அருமருந்தன்ன தமிழ்மொழிக்கண் உளவாய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருணான்கையும் பயக்க வல்லன. அவையிற்றைக் கூறும் நூல்களை இலக்கணமின்றி நேரிதிற் கற்றல் கூடாதாகலின் எழுத்துச்சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐவகை இலக்கணங்களும் ஆன்றோரா னமைக்கப்பட்டுள்ளன. தமிழிலக்கிய நூல்கள் நீதி, சரிதை, வீட்டியல், தமிழர் மணமுறை, அரசியல், வாழ்த்து முதலிய அரும்பொருள்கள் அமைந்தன. அவற்றான் உலகியலின்கண் அறம்பொருளின்பமும் அவற்றினுகர்ச்சியானுண்டாம் பக்குவத்தான் வீடுபேறும் எய்துதல் எளிதாயிற்று. இத்தகைய அரும்பொருளமைந்த நூல்களினின்றும் பண்டைத் தமிழர்தம் ஒழுக்க வழக்கங்களின் சீர்மையும் நேர்மையும் ஒருங்கே விளங்கும். இதனானே தமிழர் உலகில் அறிவிற்சிறந்தாராயும் ஏனைய மொழியாளரினும் சீரிய வாழ்க்கையினராயு மிருந்தனர் என்பதும் செவ்வனே புலனாம்.

தமிழின் தெய்வத் தன்மை

தமிழ் இறைவர் முதற்கொண்ட சான்றோர் பலராலும் அருமையிற் பேணப்பட்டு வந்தமை முன்னை நூல்களால் நன்கு உணரத்தகும். இறையனார், முருகவேள், நாமகள், விநாயகர் முதலிய தேவர்கள் தமிழின் மாட்டுப் புரிந்துள்ள நன்மைகளும் பல. இறையனார் 'இறையனார்

அகப்பொருள்' எனத் தம்பெயரான் அகப்பொருளிலக்கனம் செய்த தும், சங்கத்திருந்ததும், புலவர் பாட்டுக்கிரங்கி அருள் புரிந்தும்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழியோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே."

என்னும் செய்யுள் யாத்து அதன் பொருட்டுத் திருவேடங் கொண்டு நக்கீருடன் வாதிட்டதும் பிறவும் முருகவேள் சங்கத்தாரால் செய்யப்பட்ட நூல்களின் உயர்வு தாழ்வு கற்பித்ததும் திருமுருகாற் றுப்படைக்கு இரங்கி நக்கீரர்க்கருள் புரிந்ததும், ஔவையாரிடத்துக் கவி கேட்டதும், பொய்யாமொழியிப் புலவரைப் பாடியதும் பிறவும் நாமகள் திருக்குறளுக்குச் சாற்றுக்கவி சொல்லியதும், தமிழ்ப்புலவர் மாட்டு இருந்து அவர்க்கு வன்மையளித்ததும், பிறவும், விநாயகர் பாரதந் தீட்டியதும், ஔவையார் முதலிய புலவர்க்கிரங்கியதும், பிறவும், திருக்குறளை அசரீரியாகிய முதற்றெய்வம் ஏற்றுக்கொண்டதும் பிறவு மாம். நிகழ்ச்சிகள் முற்றும் நந்தமிழின் தெய்வத்தன்மையை இனிதிற் காட்டுகின்றன.

தமிழின் எளிமையும் இனிமையும்

தமிழ்மொழி கற்றற்கு மிகவுமெளிது, ஆரிய முதலிய மொழிக ளைப் போன்று கற்பார்க்கு இடர் செய்வதன்று. ஆரிய முதலிய மொழி களினமைந்த எழுத்துக்களும், சொற்களும், வரைதற்கும், வகுத்து தற்கும் எளியனவல்ல. அவை இன்னோசை பயலாதன. எனவே, ஆரிய மும் தமிழினோடொப்பச் சிறப்புமைத்தாயினும் தமிழ் எளிமை இனி மைகளில் சிறப்புடைத்து. இளங் குழவிகட்கும், யாக்கை வன்மையில் லாதார்க்கு முதியார்க்கும் யாதொரு துன்பமுமின்றி எளிதில் வழங் கத்தக்க தன்மையை யுடையது நமது அரும் பெருந்தமிழ். ஆரியம் கடுத்துப்பேசும் சொற்களையுடைமையால், இதழ் நெஞ்சு முதலியவுறுப் புக்கட்கும் பெருந்துன்பத்தைக் கொடுக்குந் தன்மையது. நந்தமிழ் மொழி பேசப்புகு முன்னே வாயில் எளிதில் தவழுந் தன்மைத்து. அஃதன்றிப் பேசுவார்க்குங் கேட்பார்க்கும் இனிமையும் பயப்பது. 'தமிழ்' என்னுஞ் சொற்கு இனிமை என்பது பொருள். தமிழ் சொல் லினிமை பொருளினிமைகட்கு நிலையமாயிருத்தலின் தமிழ் என்னும் பெயர் தமிழ் மொழிக்கு மிகப்பொருத்த முடைத்தே.

தமிழின் தற்கால நிலைமை

இத்தகை சிறப்புமிக்க நந்தமிழ் மொழி தற்காலத்து முன்னைச் சிறப்பு நீங்கிப் பிறமொழிகட்கிடைப் பட்டுத் தவிக்கின்றது. பண்டைப் புலவோருடைய பெருமையும் யாண்டோ புக்கொளித்தது. தமிழிலக்கண இலக்கிய நூல்கள் பயிற்சியாற் சிறவாதாயின. தமிழருட் சிலர் தாய் மொழியாகப் பிறமொழிகளைக் கொணரும் பொருட்டு முயற்சிக்கின்றனர். அந்தோ! அந்தோ!! தமிழர் தம் சீரிய அறிவு இங்ஙனம் திரிந்தது கால வேற்றுமையோ? தமிழின் அருமை பெருமைகளை நன்கறியாததனால் விளையும் தவறுகளே இவையென்று யாம் நினைக்கின்றேம். தமிழ் நூல்களின் துறைகளினுழைந்தார் ஒரு போதும் தமிழைப் பேணுதொழியார். படிப்பாரைப் பிணிக்குந் தகுதி வாய்ந்த 'தமிழை' வெறுத்துச் சோறன்மின்! நமது உரிமை, சிறப்பு, புகழ், வளமை, வாழ்க்கை நிலை முதலியவற்றிற் கெல்லாம் தமிழே ஒப்பற்ற கருவியாமென்பது எப்போதும் தமிழருடைய நினைவிலிருத்தல் வேண்டும். நமது தாய் மொழி தமிழ் என்பதை நாம் மறக்கொணாது. தமிழ்மொழி முன்னைய ஆதரவின்றி வாடுங்காலமாயிற்றாகையால் தமிழரனைவரும் அதனை முன்னை நிலைக்குக் கொணரும் பொருட்டு முயற்சித்தல் வேண்டும். நமது புலவர்களுக்கு பிறமொழிகளினும் மிக்குற்ற பற்றைத் தாய் மொழிமாட்டிருக்குமாறு செய்தல் வேண்டும். தாய்மொழியைக் கற்ற பின்னரே பிறமொழிகளைக் கற்கத் துணிதல் வேண்டும். ஆசிரியர்கள் தந்நலம் கருதாவாறு கல்வி பயிற்றுதல் நம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இவை போன்ற துறைகளிற் புகுந்துழைப்பின் நம் தமிழ் மொழி பண்டை நிலையை யடைந்து மிளிரும் என்பதிற் சிறிதும் ஐயமின்று. எனவே, செந்தமிழ் போற்றுமின்! போற்றுமின்!!

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"

திருவருட் சகாயம்.

கவனிப்பு

இச்சஞ்சிகையின் 18-வது பாரத்தில் 140-வது பக்கத்தின் விஷயம் 142-வது பக்கத்திலும், 142-வது பக்கத்தின் விஷயம், 140-வது பக்கத்திலும் இருப்பதை கவனித்து வாசிக்கவும்.

வி-பா-ஆ.

ஆராய்ச்சிப் பகுதி

பண்டைத் தமிழரும் அவர்களது நாகரிகமும் பண்பும்

தமிழகம் சீர்குலைந்ததேன்?

(முன் தொடர்ச்சி)

மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ் போதகாசிரியர், திரு—கார்மேகக் கோனாரவர்கள், சென்னை செனேட் மண்டபத்தில் 24—11—27ல் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:—

தமிழர் பிறதேயத்தினரா?

ஆசிரியர் கால்டுவெல் என்பார் தமதுமொழி நூற் புலமை ஆராய்ச்சியைக்கொண்டு தமிழர் மத்திய ஆசியாப் பகுதியிலிருந்து வந்திருக்கலாமென்று கூறுகின்றார்.

ஸ்ரீமான் கனகசபை அவர்கள் தமது சரித்திர ஆராய்ச்சியைக் கொண்டு கூறுவதாவது:—தமிழ் மொழியும் சீனமொழியும் பெரிதும் ஒத்திருக்கின்றன. நான், யாம், பெண், கண், ஈர் என்னும் தமிழ்ச்சொற்கள் தமிழ் மொழியில் எப்பொருளைக் குறிக்க வழங்குகின்றனவோ அப்பொருளைக் குறிக்கவே அச்சொற்கள் சீனமொழியிலும்வழங்குகின்றன. ஆகவே, சீனரும் தமிழரும் ஒரே குலத்தவர். ஒரே நாட்டினர் எனப்படுகிறது. தமிழர் தமிழ்நாட்டிற் குடி புகுவதற்கு முன்பு வங்காள நாட்டில் தங்கிவந்தவர்கள் எனவும், அதற்கறிகுறியாக அந்நாட்டில் தமிழ் நாட்டிலுள்ள மறவர், பறையர், பள்ளர் என்ற ஜாதிப்பெயரோடு மிகவும் ஒப்புமை வாய்ந்த மார்வர் பஃறையர் பாலர் என்னும் பெயர்களோடு சில வகுப்பினர் வாழ்கின்றனர். "கங்கை கரையில் தமிழுக்கென்பது அவர்கள் மிகுதியாக வாழ்ந்த இடம்" பிராஹி என்ற பாஷைக்கும், திராவிட பாஷைக்கும் சில ஒற்றுமை காணப்படுகின்றமையால் திராவிடர் பெலுசி ஸ்தானத்தில் குடியேறி வந்திருக்கிலாமென ராப்சன் என்றவர் தமது 'பூர்வீக இந்தியா" என்னும் நூலில் குறிப்பிட்டுஇருக்கின்றார். சவரி நாயர் தமது பரத கண்டமென்ற வியாசத்தில் தென்னிக்கியாவின் மேற்கிலு தீபங்களிலிருந்து வந்து தமிழ் நாட்டில் தங்கியவரே தமிழரென்று கூறுகிறார். ஆசியா, ஆசிரியா இவற்றிலிருந்து கடல் மார்க்

கமாக வந்து விந்தியமலைவரை பரவியிருந்தாரென்பாரும் உளர். கன்னியா குமரிக்குத்தெற்கே பரவியிருந்த லேமோரியா என்றவிடத்திலிருந்து தமிழ் மக்கள் வந்தாரென்போரு முளர்.

அக்கோடியா பல ஸ்தீனம் இவ்விடங்களே மக்களின் ஆதிவாழ் விடமென்றும், அங்கு சில இட, பொருட் பெயர்கள் தமிழ்ச் சொற்கூறு அமைந்திருத்தலைக் கொண்டு தமிழர் ஆதியில் அப்பகுதியிலிருந்தனர் என்று கூறுவாரு முளர். தமிழர் விண்ணின்றிலிருந்து தான் வந்ததாக எவரும் குறிப்பிடாதுவிட்டனர் என்பது இதிலிருந்து விளங்கின்றது. இவ்வறிஞரில் பெரும்பாலோர் தங்கள் ஆராய்ச்சிக்கும் முடிவுக்கும் ஆதாரமாகக் கொண்டது மொழி நூலேயாம். மிகப் பழைமையான தமிழ் மக்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இதுவொவ்வாது. மேலும்போதாது வேதம் வியாசரால் 4 ஆகப் பகுக்கப்படுவதற்கு முன்னர் எழுதப்பட்டதெனப்படும். தொல்காப்பியம் தற்காலம் தமிழ்மக்கள் வாழுமிடத்தையே தமிழ் நாடெனப் பகர்ந்திருக்கிறது. தமிழ்மொழி இத்தமிழகம் தோன்றிய மொழி என்றும், புறகாட்டிலிருந்து வந்த மொழியல்லவென்றும் குறிக்க அது "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்" என்று கூறுகிறது. மிகப் பழமையான இலங்கை சரித்திரங்களிலும் தமிழ் மக்களைப்பற்றிய குறிப்புகள் பல காணப்படுவதன்றி கி. மு. 6-ம் நூற்றாண்டில் விஜயோ என்ற இலங்கை அரசன் பாண்டியனின் மகளை மணந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. கி. மு. 4-ம் நூற்றாண்டில் மகதநாட்டுத் தலைநகரிலிருந்த மெகிஸ் தனீஸ் என்ற யவனசிரியர் பாண்டிய ராஜ்ஜியத்தைப் பற்றியும் வரைந்திருக்கிறார். கி. மு 3-வது நூற்றாண்டிற்கு முன்னரே சிரியா, கிரீஸ், முதலிய நாடுகளுக்கும் சேர சோழ பாண்டிய நாடுகளுக்கும் தொடர்பிருந்து வந்திருக்கிறதென்பதுசரித்திரக் குறிப்புகளாலும் அங்கு வழங்கும் தமிழ்ச் சொற்களாலும் அறியப்படுகின்றது. கி மு 20-ம் ஆண்டில் அகஸ்டஸ் ராயனிடம் ஒருபாண்டியன் தூதனுப்பி சிநேகபந்தம் பூண்டிருந்தானென்பது பழையயவனசிரியருடைய குறிப்புகளால் விளங்குகின்றது. அசோகனது 13-ம் கற்பதிவிலும்சேரசோழ பாண்டிய ராஜ்ஜியங்கள் உயர்ந்த நிலைமையில் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன.

கி பி 1, 2-வது நூற்றாண்டுகளிலிருந்த டாலமி முதலிய யவனசிரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தாங்கள் நேரில் பார்த்த பல ஊர்களையும், துறைமுகப் பட்டினங்களையும், தமிழர் மேல் நாட்டாரோடு செய்த வியாபாரங்களையும் தங்கள் யாத்திரைக் குறிப்பில் குறித்துளார்கள். இவை யெல்லாம் தமிழருடைய நாகரீகத்தைக் காட்டுவதுடன் அவர்கள் அந்நிய நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பையும் தொன்று தொட்டே தமிழர் தமிழகத்தில் வாழ்ந்த உண்மையையும் தெளிவாகக் காட்டுகின்றனர்.

இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தையே தாயகமாகக்கொண்டு வாழ்ந்தவர்களென்று அறியப்படும் தமிழ் மக்களை மொழி

யாராய்ச்சி ஒன்றையே பெருங் கருவியாகக் கொண்டு சரித்திர ஆராய்ச்சியாளர் பலர் பாதேசிகளாக்குதற்கு முயன்ற முயற்சி நியாயமுடைத்தாகாது. அன்றியும் தமிழ் தொன்னூல்களெவற்றினும் தமிழர் வடநாட்டினின்று வந்தவரென்று கொள்ளுதற்கேற்ற குறிப்புகள் ஒன்றும் காணக்கிடையா.

அந் நூல்களிற் காண்படுதெல்லாம் பண்டைநாள் முதலாகவே தமிழரசர் வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்றிருக்கிறார்களென்ப தொன்றேயாம். தமிழ் மொழியின் கூறுகள் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்ட திசைகளிளெல்லாமிருந்து தெற்குவரைகாணக்கிடைக்கும் மொழிகளெல்லாம் காணக்கிடப்பது உண்மையெனினும், அதனாலேயே அத்திசைகளிலெல்லாம் இருந்து தமிழ் மக்கள் தென்றிசை நோக்கி வந்தன ரென்பது எவற்றால் யேற்படுவதாகும்? இங்ஙனம் பலதிசை மொழி ஒற்றுமை காணப்படுவதே தமிழ் மக்கள் தென்திசையிலிருந்து வடதிசை முதலிய திசைகள் நோக்கிச் சென்றனர் என்பதற்கும் ஆதாரவளிக்கின்றதென்று சொல்லலாமன்றோ? தமிழ் மக்கள் பண்டைக்காலத்தில் தமிழகத்தில் மாத்திரமன்றி பலவிடங்களிலும் பலவித முயற்சியாளராய்ச் சென்று தங்கினார்களென்பது பழைய சரித்திரம் நூல்கள் மூலமாக தெரிய வருகின்றது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இருந்த உதயணனது சரிதை யுரைக்கும் பெருங்காதையில் மகதநாட்டு ராஜகிருக நகரத்தில் நம் தமிழ் மக்கள் போரிற் சிறந்த வீரர்களாய் வாழ்ந்து வந்தார்களென்று கூறப்பெற்றுளது.

இதனை

> "விழுப்பெருஞ் சிறப்பினுயிரமாகிய
> தலைப்பெருஞ் சேனைத் தமிழ்ச் சேரியும்" என்ற

அப்பெருங்கதை அடிகளால் அறியலாம்.

கி மு. 3000-ம் ஆண்டுகட்கு முன்னரே சீனாவிற்கும், நம் நாட்டிற்கும் கடல்வழியாக வியாபார முறையில் தொடர்பிருந்த தென்றும், தமிழ் மக்கள் வாணிபத்தின் முன்னேற்றத்துக்காக சீனாவில் குடியேறி அங்கு அவர்களே நாகரீக நிலையினை மேம்படுத்தினார்களென்றும், சர். ஹென்றி யூல் என்பார் ஆராய்ந்து கூறியுள்ளார். சீனாவிலிருந்து கற்பூரம், பனிநீர், குங்குமப்பூ, பட்டு நம்நாட்டுக்கு வந்தது சங்கநூற்களால் ஐயமறத் தெளியப்பட்ட உண்மையாகும். இதனால் சீன மொழிக்கும், தமிழ் மொழிக்கும் ஒற்றுமை காணப்படின், அஃது வியப்பின்றி இயல்பேயாகும். இதனால் சீனரே தமிழர் என்ற கொள்கை உரமிழப்பதை அறியலாகும்,

பாபிலோனியா சிரியா முதலான தேசத்தினரோடு நம்மவர்க்கிருந்த தொடர்பை ஹிப்ரு மொழியிலுள்ள விபலிய நூலில் மயிலைக்

குறிக்கும் தோகை என்னும் தமிழ் மொழியும் தந்தம் கவி முதலிய சொற்களும் காணப்படுவதே நன்கு காட்டும்.

சாவகம் முதலிய தென்மேற் றீபங்களில் தமிழர்கள் குடியேறியிருந் தனரென்பது மணிமேகலையிலுள்ள ஆழத்திரன் சரிதத்தாலும் ஏனைய சரித்திரக் குறிப்புக்களாலும் அறியப்படுகின்றது.

ஆகலால், பல் திசை மொழிகளிலும் தமிழ்மொழி புகுந்து வழங் குவது இயலபேயன்றி, தமிழர் ஆண்டெல்லாம் வாழ்ந்திருந்துபின்னரே தமிழகம் வந்தன ரென்பது பெறப்படுமாறில்லை மொழிகளின் ஒற்று மைக்காக தாளிய நியாயமாக உண்டாய பண்டைய விடுதலும் உண்டு. ஒரு நாட்டினருடைய உறைவிடத்தை அறுதியிடுவதற்கு மொழியாராய் ச்சி ஒன்றுமே போதா தென்பது தேற்றம். இத்தகைய ஆராய்ச்சி முடி புக்கு வானநூல், நிலநூல், தொல்லுயிர் நூல் முதலிய வேறு கலைக ளின் ஆராய்ச்சியும் இன்றியமையாதது. அவையும் முரணாது உதவி செய்யின் முடிவு உறுதியுடையதாகும். நிலநூல் முதலிய ஆராய்ச்சிக் கொண்டு ஹெக்கல் என்னும் ஜெர்மன் ஆசிரியர் இந்து சமுத்திரம் ஒரு காலத்தில் ஒரு பெருங் கண்டமாக இருந்தது. அதுவே மனிதரின் ஆதி உற்பத்தி ஸ்தானமாக இருந்திருக்கலாம் எனக்கூறுகின்றனர்.

ஸ்ரீமான் மாணிக்க நாயக்க ரவர்கள் பூமிபாகிய அக்கினிப் பிளம் பில் முதற் முதற் குளிர்ந்த பகுதிதான் உயிர் வாழ்க்கைக்குத் தகுதியானதென்றும், அப்படி முதல் முதற் குளிர்ந்தது நடுக் கோட் டிற்கு இருமருங்கிலும் உள்ள பகுதியே யென்றும், அதுவே முதலில் தரைப்பாங்கை யடைந்த தென்றும், அப்பகுதியில் தான் தமிழகம் உள் ளதென்றும், ஆகலால் உயிர்தொகை தோன்றுதற்கேற்ற வசதிகள் முதல் முதல் வாய்க்கப்பெற்றது தமிழகமே என்றும், பாறைகளில் பழம் பாறை யெனக்கூறுமநெருப்பு வண்ணப் பாறையே தமிழகத்திலகாணப் படுகின்றதென்றும், பூமிக்குள்ளிருந்து வெட்டி யெடுக்கப்படும் பிராணி களின் எலும்புக் கூடுகளுள் தமிழகத்தில் அகப்படுகின்ற எலும்புக் கூடுகளே மிகப் பழையனவாக அதிக ஆழத்தில் காணப்படுகின்றன வென்றும் கூறி, நில நூல் வானநூல் தொல்லுயிர் நூல்களில் நுண்மதி வாய்ந்த மேற்றிசை ஆராய்ச்சியாளர் கருத்தைத் தழுவி தமிழகமே உல கில் உயிர்க் கூட்டத்தை முதல் முதலில் தோற்றுவித்ததென்று தம் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இவைகளை ஆராயுமிடத்து மேல் பலர் மொழியாராய்ச்சிகொண்டு கூறிய கருத்தோடு பிற நூலாராய்ச்சி கொண்டு கூறுவோர் கருத்து முரண்படுதலை அறியலாம்.

ஆகலால் தமிழர் வேற்று நாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்தவ ரென்பார்; தக்க ஆதாரம் காட்டும் வரை தமிழர் தமிழ் நாட்டினரே

எனவும், அவர்கள் மங்கோலியர் முதலிய எப்பிரிவுகளிலும் சேராத ஓர் தனிக் குழுவினரென்றும் கொள்ளும் கொள்கையே பொருத்தமுடைய தாம். சரித்திர அறிஞர் கனகசபையவர்கள் தமிழர் வருவதற்கு முன் தமிழகத்தில் இருந்தவர்கள் நாகர்கள் எனவும், அவர்களுள் மறவர், எயினர், ஒளியர், ஓவியர், அருவாளர், பரதவர் என பல கிளைகளுண்டு எனவும் கூறுவர். நாகர் என்பபடுவோர் இலங்கை ஜாவா முதலிய கிழக்குத் தெற்குத் தீபங்களிலும் வடநாடுகளிலும் கங்கா தீரங்களிலும் வாழ்ந்திருந்தவர்கள் என்பது சங்க நூல்களாலும், பாகவதம், விஷ்ணு புராணம், இராமாயணம் முதலிய புராண இதிகாசங்களாலும் அறியப்படுகின்றது. தமிழ் நாட்டில் சூழ இருந்த அவர்கள் தமிழ் நாட்டிலும்வந்து தங்கியிருத்தல் கூடியதே எனினும், தொல்காப்பிய முதலிய பழைய நூல்களால் பழந் தமிழ்க் குடிகளாக அறியப்படுகிற மறவர், எயினர், பரதவர்களை மற்றும் நாகர் வகுப்பினராகக் கூறுவது பொருந்துவதாகத் தோன்றவில்லை. (சு-மி)

அறஞ் செய விரும்பு

"விசாலஹிருதயம்" ஆசிரியர்
ராம சுப்பிரமணிய நாவலர் எழுதுவது

(மாலை-1, மலர்-2, பக்கம்-53, முன் தொடர்ச்சி)

'செய' என்பது 'செய்ய' என்பதன் தொகுத்தல், ஆசிரியர் 'ஆறுவதுசினம்' இயல்வது கரவேல்' ஈவது விலக்கேல்' என இருசீர்களையே அமைத்து யாத்துள்ளாராகலின் செய்யன என்றது செய எனக் கூறினர். 'அறஞ் செய்ய' என்பதினும் 'அறஞ் செய்' என்பது சொல்லுதற் கெளிமை யுடைத்து. 'உஞற்ற' 'புரிய' முதலியன செய என்னும் பொருட்டு யாயினும், திரிசொல்லாகலான் செய என இயற்சொல்லாகவே கூறினர் என்பது. திரிசொல்லாயின் மாணக்கர்க்குப் பெரிதும் இடர்ப்பாடுண்டா மென்பதுணர்க செய என்பது வினைக்கெல்லாம் பொதுச் சொல்லாமென்க. இலக்கண வாய்பாடுகளும் செயவெனெச்சம், செய்தனெச்சம், செய்பு, செய்யா என இப்பொதுச் சொல்லானே அமைவனவாயின.

'செய விரும்பு' எனக் கூறியதனால் மாணவர் தமது அறிவு தோன்றியக்கால் தொட்டு அஃதாவது இச்சூத்திரப் பொருள் அமைந்தது முதற்கொண்டு அறஞ்செய விரும்பல் வேண்டுமென்பது பெற்றும். அதற்குமுன்னர் வேண்டாவோ எனின், அதன் முன்னர் மாணக்கர்

அறிவரும்பப்பெற்றிடாராகலின் முன்னரன்றென்க. அறிவு தோன்றப் பெறுவராயின் அது முதற்றொடங்கி என்று கொள்ளப்படுமென்க.

விரும்பு என்பது ஆசை கொள் என்னும், பொருட்டு, மனம் ஒன்றை விரும்பியன்றி அதனை இனி செய்தல் இயலாது என்பதும் விரும்பாமற் செய்வன நிலையாவாகலானும் அதனால் அடையும் பயனின்றாதலானும் விரும்பு என்று விருப்பங் கூறப்பட்டது. ஒன்றைச் செய்ய விரும்புவார் அது செய்வர் ஆகலின் விரும்பு என்ற மாத்திரையமையுமென்க விரும்பினரெல்லாம் தாம் விரும்பியவற்றைச் செய்வாரோவெனின், செய்வர் என்க செய்யாரேல் விருப்பமில்லையென்பதே படும். இன்றேல், விருப்பமிருந்து பின் கெட்டது என்பது படும் ஈண்டு விரும்பு என்பது எப்பொழுதும் விரும்பு என்னும் பொருட்டாம். நினைத்தலும் செய்தலோடொக்குமென்று ஆன்றோர் கூறவாகலான், விருப்பங் கோடல் செம்தலோடொக்குமென்றே துணிக. விரும்பு என்னுஞ்செய் என்றவளவிலே நிற்றலானும், பின்னரும் சொல்லி வற்புறுத்திலன்றிச் செய்கை நிகழாமையாலும் அது சிறப்பின்றென்க மனம் ஒருபோது விரும்பிச் செய்யின் எப்போது அவ்விருப்பம் நிகழுமென்பதும், அதனால் செய்கையும் பிறந்து வற்புறுத்தலின்றியே நிகழுமென்பதுமாம். செய்கைக்குமுன் நிகழ்வதும் விருப்பமேயென்றுணர்க. தானே விரும்பினார் பிறரையும் விரும்புமாறு செய்வர் என்பதூம் அறியத் தக்கது.

‘விரும்பு’ என்னபது முன்னிலையே வல்லினை. ஆத்திச்சூடி சூத்திரங்கள் முழுவதும் முன்னிலை ஏவலொருமைவினை முற்றாகவே முடிந்துள்ளன. ஆத்திசூடி வாசிக்கும் ஒவ்வொரு மாணவனையும் முன்னிலைப் படுத்தி ஆசிரியர் தங்கருத்தை கூறியுள்ளார். ‘அறஞ் செய விரும்பு’ என்னு மித்தொடர் முதற்கண் வைக்கப்பட்ட தெற்றுக்கெனின், அறம் விரும்பினார்க்கே தாம்பிற் கிளக்கப் புகுவன பயன்படுமாகலான் என்பது. அன்றியும் அறமே உலகிற்றலை சிறந்தது என்பதனாலுமாம். ‘அறம், பொருள், இன்பம், வீடு’ என அறத்தை முன்னர்வைத்து ஆன்றோர் கூறியதூஉ முணரற்பாற்று. ஒருநூலினால் எய்தும் பயன் இந்நான்குமே அதினுள் வீடே இறுதியில் அடையத்தக்கதாம். வீடடைதற்கு இன்றியமையாத காரணமாயுள்ளது அறமேயாம் என்க இதனினும் அறமுற் கூறப்பட்டது அமைவுடைத்தென்றுணர்க. நாயனாரும் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை இன்று இவ்வின்றியமையாதனவற்றிற்குப் பின் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் கூறிய பின்னரே பிறவற்றிற்குச் செல்கின்றார்.

“சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
சாக்க மெவனோ வுயிர்க்கு.”

திருக்குறள்.

நீயேன் பொறாமைப் படுகின்றாய்?

கலிகால தீபம்

அரிதினு மரிய தாகும் மானுட
சன்மந் தன்னைத் தானடைந் தும் நீ
பிறரின் கல்வி செல்வத்திற் பெரிதும்
பொறாமைக் குணமேன் பூண்டலை கின்றாய்?

மதியிலாய்! பொறாமைநீ மனத்திடைக் கொள்வதால்
வரும்பயன் யாது வாய்மலர்ந் திடுவாய்?
நின்னுடைப் பொறாமை நீசகுணத் தினால்
மற்றையோர் கல்வி செல்வம தியவை
வற்றிடு மெனநீ சற்றுமெண் ணாதே!

அழுக்காற் றானுன் ஆயுளுங் குன்றும்
அழுக்காற் றானுன் அறிவுங் குன்றும்
அழுக்காற் றானுன் அன்புங் குன்றும்
அழுக்காற் றானுன் அழகுங் குன்றும்

பெருஞ்சபை யாளராற் பெற்றிடு மதிப்பும்
நீங்கிடு மிதைநீ நிச்சய மெனவறி
முன்னருன் நண்பராய் நண்ணிய பேர்கள்
பின்னருன் பொறாமை பெருந்தீக் குணத்தைக்
கண்டுனை வெறுத்துக் கைவிட் டிடுவார்

தாய்தந் தையரும் தான் வெறுத்திடுவர்
அண்ணன் தம்பியும் அருவருத் திடுவார்
ஊராருன் னையோர் உலுத்தனென் றெண்ணிப்
புறக்கணித் திடுவர்; புன்மதிப் பொறாமைப்
பேய்பிடித் தலைக்கும் பேதாய்! பேதாய்!!

பண்டைநாள் நாட்டை பரிபா லித்த
மன்னருட் சிலர்தம் மனத்துறு பொறாமையா
லின்னலுற் றனரென் றிதிகா சங்கள்
செப்பிய மாற்றம் செவிமடுத் திலையோ?
துரியோ தனன்தன் துர்க்குணப் பொறாமையால்

பஞ்சபாண் டவரை வஞ்சகஞ் செய்துபின்
அடைந்திடு கதியைநீ யறிந்திலாய் கொல்லோ!

ஒப்பிலாப் புலவராம் ஒட்டக் கூத்தர்
சீர்புக ழேந்திபால் செலுத்திய பொறுமையால்
அரச சபையில் அவமா னத்தை

யுற்றன ரிதைநீ யோர்ந்திலாய் கொல்லோ!
பொறுமையா லழிந்தோர் கதையைப் புகலின்
விரியும்; அறிஞரை வினவிநீ யறிவாய்!
தீங்குப் பிறர்க்குச் செய்கிறே னென்று
ஆங்காரத் துடன் அறிவிலாச் சிநட!

எண்ணுகின் றுயதை யினிதுட னுய்ந்து
பார்க்கினி னுனக்கே பழியது சூழும்!
பொறுமையா லுனக்குப் பொல்லாக் குணங்கள்
அனைத்தும் வந்து அடைகின் றனவே!
கொலையொடு களவு குறித்திடு வஞ்சகம்

சூதா மிவைகள் தொடர்ந்துனைப் பற்றி
ஐயகோ! தினமும் அலைக்கின் றனவே!
மற்றொருவன் நன் மனையா ளோடு
குற்றமி லில்லறங் குவலயந் தன்னில்
நடாத்துதல் கண்டுநீ நாளும் பொறுமையால்

அவர்களைப் பிறிக்க ஆவல்கொண் டலைகிறாய்!
இன்னொருவன்தான் முன்னைப் பிறவியில்
பண்ணிய புண்ணியப் பயனாய்ப் பெருநிதி
படைத்திடின் பொல்லாப் பாழும் பொறுமையால்
மனமது புகைந்து வாடுகின் றாயே!

அன்றியு மவர்க்குறு மரியசெல் வத்தைக்
குன்றச் செய்யக் குள்ளமந் திரிபோல்
அடுத்துக் கெடுத்திட ஆவல்கொண் டிடுவாய்
பிறர்தான் முன்செய் பெருப்புண்ணி யத்தால்
சுகமாய்ச் சீவியம் தொல்புவி யின்கண்

நடத்துதல் கண்டுன் விடத்தைநேர் பொறுமைக்
குணத்தாற் றயாம் மனத்துறு கின்றாய்!
மற்றவர் தமக்கு மதிப்பும் புகழும்
வருவது கண்டுநீ மனத்துறு பொறுமையால்
அவர்க்கிலாக் குற்ற மனைத்தையும் புனைந்து

உரைத்துத் திரிந்து உலைகின் றாயே!
கல்வி யறிவு சான்றிதி மொருவர்
தான்பிர யாசத் தாலொரு நூலை
இயற்றி னதில்நீ ஏனோ குற்றம்
பார்க்கின் றாயோ? பகர்வாய்! பகர்வாய்!
நீயதிற் குற்றம் நி ழ்த்திடு தன்மையால்
அந்நூ லில்லா தழிந்துதான் விடுமோ?
குற்றங் கூறிடும் குணமுள வுன்னைக்
கற்றறி பெரியோர் கசடனென் றறவணி
இகழ்வா ரிதைநீ யேனோ தெரிந்திலாய்!
பொறாமைக் குணத்தால் பொன்போ லரிய
நேரந் தன்னை நீவீ ணாக்கக்
கழிக்கிறா யொன்று கழறுவன் கேளாய்!
துன்பந் தருமித் துர்க்குணம் விடுத்து
ஈசனடி யினை என்றும் நினைத்து
போற்றித் துதித்துப் பொல்லாப் பவவினை
மாற்றி யாவரும் மதித்திட வாழ்வாய்.

குறிப்புரை:—பொறாமை யென்னும் பேய்பிடித்தலைக்கும் பேதை மாந்தர்காள்! நினது பொறாமைக்குணத்தால் நீ அயலாருக்குத் தீங்கிழைக்கக் கருதின் அத்தீங்கு உன்னையே வேதனைப்படுத்தும் என்பதை அறி! "பிறருக்கு வெட்டியகுழி தனக்கே ஆனாலும் ஆகும்" என்னும் பழமொழியை நீ ஏன் மறந்து போனாய்? பொறாமை யென்னும் பூஷணத்தை அணிந்தவன்பால் எத்தகைய நல்லொழுக்கங்களும் காணப்படமாட்டா. மஞ்சட்காமாலை யுள்ளவனுக்கு உலகமே மஞ்சள் நிறமாகத் தோற்றுவது போல; பொறாமையைப் பூண்டவனுக்கு எதைப் பார்த்தாலும் பொறாமையே உண்டாகும். இப்பாழும் பொறாமையே முன்னின்று மனிதனைக் கெடுக்கின்றது. மாந்தர்காள்! பொறாமை யென்னும் அழுக்கை மனத்திடை சேர்க்கவேண்டாம்! வேண்டாம்!! பொறாமை யென்னும் அழுக்கைப் போக்கி பரிசுத்தம் பொருந்திய ஒழுக்கத்துடன், நல்லமனத்துடன் வாழ்மின்! வாழ்மின்!! நல்ல மனமுடையவனுக்கு நாளும் நலன் பல உண்டாகும்.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

வி. பா. ஆசிரியர்.

நமது நீதிக்கதைப் பகுதி

குடியாத்தம் 'சேஷவிலாஸ்' தமிழாசிரியன்,
லால்குடி - சே. கந்தசாமி எழுதுவது

அலமேலு மூட்டிய அவியா நெருப்பு

(உரிமை ஆசிரியனுக்கு உரியது)

(முன் தொடர்ச்சி)

ஆவியில் வாட்டப்பட்ட அழகிய பூவைப் போலத் தொங்கிக் கொண்டிருந்த அலமுவின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு வருந்திய நான், "ஏ அலமு! உன்னை இச்சங்கடத்தினின்றும் விடுவிக்கத் திராணியில்லாத என் மேலா உன் நோக்கம் விழவேண்டும்! ஆஹா! தீபகாச்சியாருக்கு முன் நின்று சந்தோஷத் தாண்டவமாடும் உன் முகத்தை ஊன்றிப்பார்த்த இக்கண்கள், இக்காட்சியைக் கண்டு இத்தனை நேரமாகியும், இன்னும் நங்கு குன்றெடுப்பதுபோல எடுக்கப்படாமலிருப்பதுவும் என் பிராரப்த கருமமே ஒழிய வேறில்லை;" என்று எண்ணியெண்ணி வருந்தி ஒன்றும் செய்ய இயலாமல், "ஏ ஆண்டவனே! தாயின் மனத்தையாவது மாற்றுவிட்டால் உமக்குப் பெரிய பெண்பாவம் வந்து சம்பவிக்கும்; வீணாகப் பெண்பாவத்தைக் கொள்ளவேண்டாம், தமதருள்நோக்கை பூத்தேகமுள்ள அலமுமேல் செலுத்தி அவளை வருத்தத்திற்குள்ளாக்காது செய்யும்;" என்று வேண்டிக்கொண்டு, அவ்விடத்தைவிட்டு வீட்டுக்குவர இஷ்டமில்லாமலிருந்தபோதிலும், இரவலடிக்குப் போயிருக்கும் அலமுவின் தந்தை தன் வேலைக்காரர்களுடன் வந்துவிடுவாரோ வென்று கோழையாகிய நான் பயந்து, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வீடுவந்து சேர்ந்தேன்.

என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த இராஜம் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு மெதுவாக நடந்துவரும் என்னைப் பார்த்ததும், என்னைத் துக்க மூட்டை அழுத்தியிருப்பதை அறிந்தவளாய் விஷயத்தைக்கேட்டு என் மனப்புண்ணைக் கிளற இஷ்டமில்லாது பேசாமல் நின்றுக்கொண்டிருந்தாள்.

நானும் பேசாமல் வீடுபுகுந்து நடையின் கதவு மூலையில் வைத்திருந்த என் படுக்கையை எடுத்துத் திண்ணையில் விரித்துப் படுத்துக்கொண்டேன்.

நானாகவே அலமுவின் விஷயத்தைப்பற்றி ஏதாவது சொல்லுவேன் என்று எதிர்பார்த்த என் தங்கை, நான் ஏதும் உரைக்காமல் படுத்துக்கொண்டதைப் பார்த்து, உள்ளேபோய்த் தீர்த்தம் கொண்டுவந்து, கந்தா! சாப்பிடத்தானில்லை: தீர்த்தமாவது கொஞ்சம் குடிக்கிறாயா?" என்றுபசரித்தாள். நான், "தங்காய் எனக்

கிருந்த பசிதாகம் எல்லாம் எங்கேயோ பறந்துபோய்விட்டது;" என்று ஈனகுரலில் விடையிறுத்தேன், என்னையுமறியாமல் ஒரு பெருமூச்சும் உண்டாயிற்று. அதையுணர்ந்த அவள், அண்ணா அலமு சௌக்கியமாயிருக்கிறாளா?" என்று நான் எங்கே கோபித்துக்கொள்ளப்போகிறேனோ வென்று அரையுங் குறையுமாகக் கேட்டாள். அந்தக் கேள்வியை ஏற்கனவே எதிர்பார்த்திருந்தவனாகையால் உண்டான விசனத்தைச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு, "தங்காய்! அவள் இருக்கிறாள்—சௌக்கியமாய்;" என்று இழுத்தாற்போற் புகன்று, "இருட்டிவிட்டது; என் மனம் இன்னும் நிம்மதியடையவில்லை; எல்லாம் விவரமாய்க் காலையில் கூறுகிறேன்," என்றும் சேர்த்துக்கொண்டு மேற் கேள்விகளுக்கு இடம் விடாமல் செய்தேன். ஆயினும் அவள் அசையாது நின்று கொண்டிருந்ததைக் கண்டு, "இராஜம்! நீ ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? பகலில் பக்கம் பார்த்து பேசவேண்டும்; இரவில் அதுவும் கூடாது; ஆகையினால் என்னையும் என் மனத்தையும் தனியே விட்டுவிட்டுக் கதவை சாத்திக் கொண்டு போ" என்று சொன்னேன். அவளும் உள்ளே போய்விட்டாள்.

நான் படுக்கையில் படுத்தபடியே கண்களை மூடினேன். பயாஸ்கோப்பில் படங்கள் மாறுவதுபோலப் பலப்பல காக்ஷிகள் என் அகக்கண் தோன்றி எனக்கு நித்திரை பங்கத்தை உண்டாக்கின. அலமுவின் தாயைக் கொல்லலாமா வென்றெழுந்த சீற்றம் போதிய சாந்தத்தினால் அமைதியுற்றது. மறுபடியும் புறப்பட்டுப்போய் அவ்விராக்ஷசியுடன் சண்டை போட்டாவது அலமுவை விடுவிக்க வேண்டுமென்றெழுந்து பத்தடி நடந்தேன் "அலமுவுக்கு இக்கதியை எழுதிய பிரமன் என் கோபத்திற்குப் பயந்தே கட்புலனறியாது வாழ்கிறான் போலும்" என்று பிதற்றினேன். சேலக்காரை வண்டியேற்றப்போயிருந்த தந்தை வந்திருப்பார் என்றெண்ணி, திரும்பினேன். படுக்கையிற் படுத்தேன்; நித்திரை வாராமையால் வலது புறமும் இடது புறமும் புரண்டேன். எனக்குக் காய்ச்சல் வருவது போல உடம்பு 'கண' 'கண' வென்று சுட்டுக்கொண்டிருந்தது. ஆதலால் மறுபடியும் எழுந்தேன். முற்றுப் புள்ளி இல்லாத பல யோசனைகள் இண்டாயின * * * * முடிவில், இப்படிப் பலவாறு உழன்ற என் மூளையும் வேலை செய்ய கொஞ்சம் சோம்பிற்றாகையினால் தூக்கம் வருவதுபோலிருந்தது. படுத்தேன்; கால்மணிநேரம் உண்டான அவ்வரைத் தூக்கத்தில் ஆயிரம் உபயோகமற்ற கனவுகள் உண்டாயின. அவை முடிவுறும் சமயத்தில் என்னிரு பாதங்களையும் யாரோ மெதுவான தன் கைகளால் தடவுவதுபோலிருந்தது. திடுக்கிட்டுக் கண்ணை விழிக்க, ஓர் மங்கை தூசியும் அழுக்கும் படிந்திருந்த என்னிரு பாதங்களையும் தன்னிரு கரங்களால் தைவந்து கொண்டிருக்கக் கண்டேன். அத்தருணம் என் ஞாபகமெல்லாம் அலமுவையே அணைந்திருந்தமையால் திடுக்கிட்டு 'அலமு' என்றேன்; அவளும் நடுங்கிய குரலில், 'அன்பரே!' என்று சொல்லி, என் கால்மேல் தன் சிரசை வைத்துக் கண்களில ஒத்திக்கொண்டாள்; திடுக்கிட்டு காலை இழுத்துக்கொண்டு எழுந்திருந்தேன்; நான் அலமேலுவைப் பற்றியே கனவு கண்டுக்கொண்டிருந்தபடியாலும், அப்போது நடந்த விஷயங்களும் கனவுபோலவே (பஞ்ச பூத சாக்ஷியாய்ச்சொல்லுகிறேன்.) தோன்றிற்றனபடியினாலும், ஒன்றும்

செய்யத் தோன்றாமல் அவளருகில் போனேன். அவளும் என்னைக் குறுகினாள், நான் என் கைகளை விரித்தேன்; அவ்வனிதாமணியும் அகப்பட்ட அக் கைகளில் சரணாகதியாய் விழுந்தாள்; அப்படியே அவள் முதுகைக் கட்டிக்கொண்டேன்; அவளும் என்னைக் கட்டிக்கொண்டபோது தன் மார்பின் தனமிரண்டும் என் மார்பில் தைத்து அப்புறமும் ஊடுருவிப் போயிருக்குமோ வென்று தடவிப்பார்த்தாள் போலும். ஆனால், ஐயோ, கன்னிகழியாத அவளிரு சிறுதனங்கள் தென்னம் பிள்ளையின் இளங்குரும்பைபோலிருந்ததை என் மார்பினாலேயே அறிந்த நான் அவள் மடமைக்காகப் புன்முறுவல் செய்யாமலிருக்க முடியவில்லை

* * என் பொறுமையுள்ள அன்பார்ந்த நண்பர்களே! எந்தக் காரணத்தினாலோ அறிவீனனும், மகா பைத்தியக்காரனும் ஆன நான் அம்பங்கா தீபத்தை அனுபவிக்காமல் போய்விட்டேன். இது எங்களுக்குள் நடந்த இரகசியமாயினும் ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லவேண்டி யிருப்பதால் சொல்லும்படி நேரிட்டது. கூட அறிவீனனான நான் நடந்ததை நினைத்தாலும் கொஞ்சம் களிக்கலாம் என்று எண்ணி ஆண்டவன் மாத்திரமறிந்த இவ்விரகசியத்தை உங்களுக்கும் தெரிவித்தேன். * * * * * *

மேற்கண்ட இரண்டொரு வாக்கியங்களை எழுதுவதற்கா யிருக்கும் சாகவாசம்கூட நான் எனக்குப்பிரமையாயும், கனவுருவமாயும் தோன்றிய அவ்வுருவை அணைத்திருந்திருக்க மாட்டேன். ஏனெனில், கனவிலேயின்றி நினைவினிலுண்டாகும் இன்பம் மீதூறிற்று. உடனே என் கைகளையும் அவள் கைகளையும் வெகு சிரமத்துடன் விலகிக் கொண்டு, திடுக்கிட்டு, மறுபடியும் நடுங்கிய ஈன குரலில், 'அலமு!' என்றேன். அவளும் 'மன்னிக்கவும்' என்று சொல்லி, மறுபடியும் என் காலின்மேல் சிரசைவைத்துச் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டாள். நான் அவ்விருட்டிலேயே அவளைத் தூக்கி நிறுத்தி, "என் அலமு! கோடீஸ்வரன் மகளான உனக்குத் தூசுகளும் குப்பைகளும் படர்ந்த ஒரு அஷ்டதரித்திரனுடைய கால்களைத் தொட்டு வணங்கிக் கண்களில் ஒத்திக்கொள்ள என்ன விதி நேரிட்டது?" என்ற சொல்லி முடித்து, என்னையறியாமலும் கிளம்பிய என் அழுகையைத் தடுக்க வீண் பிரயத்தனங்கள் செய்தேன். அப்போதென் னருமை அலமு—ஸ்திரீ உலகிற்கே ஒருதாரணமா யிருந்திருக்கக்கூடிய அக்கண்மணி — என்னை விளித்து, "தங்களுடைய எண்ணிறந்த அனுபவக் கதைகளைக் கேட்டு, மகிழ்ந்து, எமது வயம் ஆன எற்குத் தமது சிறந்த பாததூளிகள் கிட்ட நான் மகத்தான பாக்கியம் செய்திருக்க வேண்டும்; என் மணவிஷய பேச்சுகள் நடந்துகொண்டிருக்கிறதான படியினால், பிரவர்த்த ஸ்ரீமதியம்மாள் முன் செய்த சத்தியத்தை ஞாபகப்படுத்தி மறக்காமலிருக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளவே நான் இந்நடு நிசியில் ஒருவருக்கும் தெரியாமல் வந்தது; வந்த காரியம் ஆகிவிட்டது; எனக்கு நாழிகை ஆகிவிட்டது; நான் போய் வருகிறேன்; என்று சொல்லித் திண்ணையை விட்டிறங்கி இரண்டடி நகர்ந்தாள்.

"ஆகா! கொடிய பாவியின் தண்டனைக்குள்ளாகயிருந்த இவள் இங்கு எப்படி வந்து சேர்ந்தாள்; நாம் காண்பது கனவென்றும் நினைவென்றும் தீர்மானிக்க

முடியவில்லையே!'' என்று பெரிய யோசனையிலிருக்கும்போது அலமேலு திரும்பியும் என்னிடம் வந்து ஏதோ சொல்லவோ கேட்கவோ வாயெடுத்தாள். அதற்குள் ஏதோ நினைத்துக் கொண்டு திரும்பிவிட்டாள். நானும் அவளைத் தடுக்க முடியாமல் நின்றுக்கொண்டிருந்தேன்.

அவள் காலடிச் சப்தமும் கேட்காமற் போகவே, இங்கே என்னால் விவரிக்க முடியாததும், ஞாபகத்திற்கு வராததுமான பலப்பல எண்ணங்கள் கொண்டேன். எவ்வளவு யோசனைகள் செய்தபோதிலும் அலமு அந்தவேளையில் அங்கு வந்த விதம் தான் விளங்கவில்லை. மேலும்; அவள் ஏதோ சொல்லவந்தும் பிறகு பேசாமற் போனதற்குக் காரணம் தெரியவில்லை. அவள் எதைச் சொல்லி அல்லது எதைக் கேட்கத் திரும்பி வந்திருப்பாள் என்னும் யோசனை முடிவே காணாது போயிற்று. மேற்சொன்ன எண்ணங்களும் யோசனைகளும் என் அன்றைய நித்திரையைக் கொள்ளை கொண்டன.

பொழுது எப்போது புலரப் போகிறதென்று எதிர் பார்த்தவனாய்ப் படுத்திருந்தபோது, எனக்கு ஏற்பட இருக்கும் மகத்தான துக்கத்தைக் காட்டுவது போலப் பக்ஷி ஜாலங்கள் எல்லாம் கத்தியவண்ணம் பறந்துபோய்க்கொண்டிருந்தன. நானும் என் நித்திய கருமானுஷ்டானங்களையெல்லாம் முடித்துக்கொள்ளுவதற்காகப் பக்கத்திலிருந்த ஐயனாற்றங்கரைக்குப்போய், மனித சஞ்சாரமற்ற கிழக்குக்கரை மதகில் பக்கத்தில் உட்கார்ந்து இரவில் நடந்த சம்பவங்களையெல்லாம் ஒன்றொன்றாய் எண்ணிப் பார்த்தேன் "என் காலடியில், இருப்புக்கொள்ளாமல் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் ஐயனாறே! உனக்கும் என் அருமை அலமேலுவுக்கும் ஏதாவது உறவின்முறை உண்டோ? நேற்று என்னண்டையில் வந்து காக்ஷி தந்து, ஆலிங்கனமு முதவிய அலமேலுவின் ஆணிபோன்ற பருவமடையாத அரும்ப முலைகள் என் மார்பில் அழுந்தியபோது, உன்னைப்போலத்தான் அவளது மார்பு 'பட - டட' வென்று தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது. என் மனமும் பெருமூச்சுக்களினால் தூக்கிப்போடுவதனால், நீயும் உன் அருமைக் காதலியைப் பிரிந்து என்னைப் போலத் தவிப்பவன் போலிருக்கிறது;'' என்று எண்ணமிட்டுக்கொண்டே வாராவதியின்மேலுட்கார்ந்து ஆற்றைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

காலை இளம் வெயிலில் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த அவ்வாற்றின் சிறு அலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த என் கண்களுக்கு ஏதோ கருப்பு வர்ணமாயிருந்த ஒரு வஸ்து மிதந்து வந்துகொண் டிருப்பது தெரிந்தது. நீண்டு சுருண்டு தலையயிர் போலிருந்த அவ்வஸ்து அமிழ்ந்து அமிழ்ந்து எழுந்ததை நோக்க, அவ்வஸ்துவுக்கடியில் கொஞ்சம் பளுவான வஸ்து கட்டாயம் இருக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. அது பலபலச் சங்கிலி எண்ணங்களைக் கூட்டிக்கொண்டு வந்தபடியால், தாமதிப்பதில் பிரயோசனமில்லை என்று தீர்மானித்து, இடுப்பில் ஒரு துண்டை மாத்திரம் இறுக்கக் கச்சகமாகக் கட்டிக்கொண்டு; வாராவதியிலிருந்தபடியே அவ்வஸ்துவின் பக்கத்தில் திடீரென்று குதித்தேன். அது பதகோரமாயிருந்தமையால் ஆழமாயும், சுழல்கள் கொண்ட

தாயும் இருந்தது. நன்றாக நீந்துகிறவர்களுக்கே அவ்விடத்தில் அலைகளுக்குச் சமாளித்துக் கொள்ளுவது கஷ்டமென்றால் நீச்சில் அதிகப் பழக்கமில்லாத எனக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது என்று சொல்லவும் வேண்டுமா? என் சக்திக்கு மீறிய சிரமங்கொண்டு அவ்வஸ்துவைப் பற்றி இழுத்துக்கொண்டு, கால் தரையில் தட்டுப்படும் இடத்திற்கு வந்து நின்று, தண்ணீர் மட்டத்திற்குக் கொஞ்சம் மேலே அவ்வஸ்துவை இழுத்துப் பார்த்தபோது ஒரு பத்தரைமாற்றுத் தங்கம்போன்றிருந்த முதுகு தெரிந்தது. நான் திடுக்கிட்டவனாய், என் இரண்டு கைகளையும் அவ்வாசாமியின் இடுப்பின் பக்கத்தில் கொடுத்து, முக்கித் தலைக்குமேலே தூக்கி, குயவனது சக்கரத்தைப்போலக் கிறு கிறு என்று சுழற்றினேன்.

அடுத்த நிமிஷத்தில் அந்த ஆசாமி குடித்திருந்த ஜலத்தைக் கக்கவே, அவரை நேராக என் பக்கமாய்த் திருப்பி பார்த்தபோது என் மனக்கண் இடைவிடாமல் வாழும் அலமேலுவா யிருந்தது. உடனே நான், என் கண்களை நம்பாமல் நன்றாகத் தேய்த்துக்கொண்டு பார்த்தேன். அப்போதும் அவ்வதனமாகவே விளங்கிற்று; 'அலமேலு!' என்று கூப்பிட்டேன். பதில் வாராததால் கலங்கிமறுமுறையும் 'அலமு' என்றழைத்தேன்.

சில வினாடிகளில், என் குரலைக் கேட்ட அலமேலு கண்களைத் திறந்தாள்; என்னைக் கண்டதும் திடுக்கிட்டாளாயினும், ஒருவாறு தேறி, சந்தோஷப்பட்டு, 'என் கடைசி நிமிஷங்களில் தம்முடைய தரிசனம் காணும் பாக்கியம் கிட்டியதற்காகச் சந்தோஷப்படுகிறேன்; ஆயினும், தம்மை இப்படியே இறுகக்கட்டி ஆலிங்கனம் செய்தனுபவிக்கக் கூடாதிருப்பதற்காக வருத்தமுங் கொள்ளுகிறேன்; நேற்று தம்மைவிட்டுப் பிரிந்து வந்தபோதே ஒரு ஆலிங்கனமும், முத்தமுமாவது கெஞ்சிப் பெற்றுக்கொள்ளலாம் என்று திரும்பிக்கூட வந்தேன்; வழியில் நானாகவந்து கேட்பதால் என் நடத்தையில் உமக்குத் திடீரென்றேதாவது சமுசயம் உண்டாகுமோ வென்று பயந்தேன்; சமுசயம் ஏற்பட்டு வெறுத்துவிடுவீரென்றும், கருதினேன்; என் உடம்பு தமக்கு அக்நி சாக்ஷியாக கொடுக்கப்படவுமில்லை; தமது உடலையும் அநுபவித்துக்கொள்ள எனக்குப் பெற்றோர்களால் உத்தரவு தரப்படவுமில்லை; ஆகையினால் என் முட்டாள் தனத்திற்கு நானே வெட்கி, அந்த ஓர் ஒரு நெஞ்சோடுடன் வீட்டுக்குத் திரும்பினேன்;—தம்முடன் கூடி இன்பமாகக் காலத்தைக் கழிக்கும்படியான பாக்கியம் மகத்தான புண்ணியம் பண்ணியவர்களுக்கு மட்டும் கிடைக்குமே ஒழிய என்னைப் போன்ற மகா பாபிகளுக்குக் கிடைக்கப்போகின்றது இல்லை; ஆயினும்

அன்ப! மறுபிறப்பிலாயினும் தம்மை நாடித் தேடி மணந்து மணமொப்பிச் சுகிக்க எத்தனை புண்ணியம் பண்ணவேண்டுமோ அவ்வளவையும் செய்து முடிக்கத் தக்க சாமர்த்தியத்தையும் தைரியத்தையும் தரும்படி பிரவர்த்த ஸ்ரீமதி யம்மாளைக் குறித்துத் தவமிருக்கிறேன்:—என்னால் இன்னும் அதிக நேரம் நிற்க முடியாது; தம்மேல் நான் பூரண அன்பு வைத்திருப்பதற்கு இவ்வெதிர் பாராத சந்திப்பே சான்ற சாக்ஷியாகும், "என்று சொல்லிக்கொண்டே என் கைகளில் சாய்ந்தாள். அந்தச் சமயத்தில் தேவியின் திருச்சந்நிதியின் முன்பாக அலமேலு என்னும் அம்மங்கையர் திலகம் மூட்டிய நெருப்பு அவியாது வளரலாயிற்று.

ஆகவே, என் கைகளில், தன் நினைவழிந்து சாய்ந்த அலமேலுவை இடது கையினால், நழுவி விழாமற்படிக் கவளை இறுக அணைத்து "அலமேலு! நீ மூட்டிய நெருப்பு அவியாத நெருப்பு ஆகிவிட்டதே! ஐயோ! என் ஆலசநெருப்பு தணியாது என்னை எரித்து இந்த நிமிஷத்திலேயே உன்னுடன் சேர்த்து விடாதா?" என்று புலம்பி என் வலது காத்தால் அவளது தலைமயிரை ஒதுக்கி, அழகு குன்றாத அவ்வனிதைக்கு முதலும் கடைசியுமான ஒரு முத்தந்தந்து, இரண்டடிகளை ஓரமாய்த் தூக்கிவந்து நிறுத்தினேன். அவளது உடலின் மேற்பாகம் என் கண்களுக்குத் தெரிந்தமையினால் அவளது உடலில் அடிபட்டதனாலுண்டான சில தடிப்புகள் தென்பட்டன. கருரத்தங் கண்டிருந்த அவ்விடங்களைக் கண்டு வருந்தி நான் தடவிக்கொடுத்தேன்; அவள் சூரியனைக்கண்டு விரியும் தாமரைப்போலத் தன் கண்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திறந்தாள். அவளது அப்போதைய நிலைமை எனக்குப் பலப்பல எண்ணங்களை உண்டாக்கின. என் மேலேயே உயிராயிருந்த அலமுவை அப்படியே அழைத்துக்கொண்டுபோய் கண்ணுக் கெட்டாத ஓரூரில் வாழலாமா வென்று கூட எண்ணினேன். அலமு அதற்கு உடன்படமாட்டாளாகையினாலும், எனக்கும் என் ஞாந்தனத்தை வேறாருக்கு மாற்றிக்கொள்ளுவது கஷ்டமாகத் தோன்றிற்றாகையினாலும் அவ்வெண்ணத்தை வீண் என்று தள்ளிவிட்டேன். பிறகு அவ்வெழிற்கொடியை விளித்து, "என் அலமு! உன் பரிதாபகரமான இந்நிலையைக் காணும்போது என்மனம் எப்படிப் பதைக்கின்றதோ அதை விவரித்துச் சொல்ல முடியவில்லை; புஷ்பத்தின் அகவிதழையும், உளுத்தம் விழுதையும், தோற்கச் செய்யும் மிருதுவான உன் சரீரத்திற்கு அக்கொடுந் தண்டனையைத் தர உன் மாதா மனம் ஒவ்விற்றே; ஆகா! விசிறிக் கட்டையினால், தொங்கிக்கொண்டிருந்த உன் தேகத்தில்

உன் அன்னையினால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு அடியும் என்மேற் பட்டதுபோலவே தோன்றிற்று; ஐயோ! என்னைப்போலப் பதைத்துக் கொண்டிருந்த அந்தக் குமட்டிக்குமேல் நெருப்பிலிட்ட பூவைப்போல பிறந்தமேனியாய் வாடித் தொங்கிக்கொண்டிருந்த உன்னைக் கண்டும் விடுவிக்க முடியாத என் நிலையைக் கருதினால் நான் உனக்கேற்றவனில்லை என்று தோன்றுகிறது; அலமு! இரவில் உன்னைக்கண்ட உடன்காலே நீ எப்படித் தப்பித்துக் கொண்டு வந்தாய் என்றே ஆச்சரிய மடைந்தேன்; அந்த அடியும், கானலும் பட்டு தண்ணீரில் விழுந்த உனது உடல் எரிச்சலுடன் எவ்வாறு தவித்ததோ? என்னென்ன எண்ணினாயோ?' என்று சொல்லி அவளது கரத்தைத் தடவிக் கொடுத்தேன். அவ்வமயம் உண்டான ஆனந்தத்தில், ஆற்றினடுவில் மதகோரத்தில் நின்றுக்கொண்டிருந்ததை மறந்தே போய் விட்டேன்.

என் வார்த்தைகளினாலேயே பேரின்பத்தை யடையும் அவ்வனிதை, என் ஸ்பரிசம் படவே என்னிலும் இன்பமுற்று, என்னைப்போலத் தானும் ஆற்றிலிருப்பதை மறந்து போனாள் என்பதை அவளது முகத்தால் உணர்ந்தேன். ஏனெனில் என்னை நோக்கிப் புன்முறுவல் செய்து, "என் ஆகத்தைக் கொள்ளைகொண்ட அன்பரே! அன்புக்கும் அடைக்கும் தாள் உண்டோ?" என்று சொல்லித் தலையை, நாணத்தால் தொங்கவிட்டாள். நான் அவள் முகத்தை நிமிர்த்தி, "அலமு! ஏன் இவ்வாறு தலையைத் தொங்கப் போடுகிறாய்?" என்றேன். அவள் நாணிக் கோணி, "என் மனம் வாழ் மன்னரே! சற்றுமுன்னர் தாம் பேசியதிலிருந்து தமது மனம் மிகவும் வருந்தியதென்றும், அதற்குக் காரணம் மகாபாபிகளிலும் பாபியாகிய என் தரிசனமே என்றுநினைக்க நடுங்குகிறது என் மனம்; ஒருவருக்கும் தெரியாது என்று என்னை இரகசியமாய்ச் செய்த தண்டனை உமக்கு எப்படியோ தெரிந்துவிட்டதே! தொங்கிக்கொண்டிருந்த நான் உபமை ஸ்மரித்துக்கொண்டிருந்த நான் உம்மை ஸ்மரித்துக்கொண்டிருந்த பொழுது வாசலில் எங்கள் வண்டி வரும் சப்தம் கேட்டது; உடனே என்னன்னை குமட்டியை அவித்து, என்னை விடுவித்து ஓர் ஓரத்தில் படுக்கவைத்து, 'நடந்த விஷயத்தைத் தந்தையிடமும் தெரிவிக்கக்கூடாது' என்று திட்டம் செய்தாள்; பிறகு வாயிர்கதவைத் திறந்தாள். தகப்பனார் வந்தார், வந்ததும் குழந்தை என்ன சொல்லுகிறாள்? அவளுக்கு இஷ்டமில்லாவிட்டால் நாம் பலவந்தம் செய்யக்கூடிய விஷயமில்லை; ஏனெனில் இது ஆயிரங்காலத்துப் பயிர்; தானாகக் கனியாத பழம் தடிபடிக்

குத் தானா பழுக்கும்;'' என்று சொன்னார். என் அன்னை, "இதென்ன எனக்குத் தெரியாதா? நீங்கள் சொல்லக்கூட வேணுமா? முதலில் மாட்டேன் என்றாலும், அவாளுடைய செல்வம், சீர், சிறப்பு எல்லாவற்றையும் எடுத்துச் சொன்ன பின்பு உடன் பட்டாள்; இப்போது தான் படுத்துக்கொள்ளப்போய் அயர்ந்து தூங்குகிறாள்; சேலத்தார் என்ன சொன்னார்கள்? பெண் பிடித்திருக்கிறதாமா?'' என்று கேட்டாள். இதற்கு என்னருமைப் பிதா, "பெண் மனசுக்குப் பிடித்திருக்கிறதாம்; பெண்ணைக் கூப்பிட்டு பிள்ளையைப் பார்த்தாயா? பிடித்திருக்கிறதா! அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறாயா?' என்று கேட்டுப் பாருங்கள்! அவள் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளுகிறபக்ஷத்தில் விவாகத்தை முடித்து விடலாம்' என்று சொன்னார், நான், 'சரி விசாரித்து நாளைக்கு தபால் போடுகிறேன்' என்று சொல்லி ரயில் புறப்பட்டதும் வீட்டுக்குப் புறப்பட்டேன்;'' என்று சொல்லி முடித்தார்; அந்தச் சமயத்தில் நான் எழுந்து நடந்தவைகளை எல்லாம் விவரமாகத் தந்தையினிடம் சொல்லிவிடலாமா வென்று யோசித்தேன். என்னிஷ்டம் நிறைவேறுமாயினும் என் தாய் பொய்யளும், பொல்லாதவளும், தந்தைக்கு ஆகாதவளும், எனக்குப் பகையும் ஆகிவிடுவாள் என்று வாளாயிருந்தேன்; அவர்களுடைய இன்பத்திற்கு நம்மால் ஹானி நேரக்கூடாது என்று கருதிய நான் அந்நிமிஷத்திலேயே பிராணத்தியாகம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன்; அப்படி இறந்துபோவதற்கு முன்னால் உம்மைப் பார்க்கவேண்டும்; பார்த்துச் சேவித்துப் போகவேண்டும் என்று ஆசை எழும்பிற்று; ஆதலால் வீட்டில் யாவரும் தூங்கின பிற்பாடு உம்மை வந்தடைந்தேன்; ஆண்டவன் கிருபையினால் எதிர் பாராத ஆலிங்கன மடைந்தேன்; இன்பமுற்றேன்; சொல்ல விரும்பிய வார்த்தைகளைச் சொல்லித் திரும்பினேன். பத்தடிப்போனேன்; இப்பிறப்பில் மறுபடியும் கிடைக்காதாகையினால் என்னை ஒரு தரம் இரு முத்தங்கள் தந்து என் நெஞ்சிரலை நீக்குமாறு கேட்டுக் கொள்ளலாம் என்று வந்தேன், முன்னால் சொன்ன காரணங்களால் லஜ்ஜைப்பட்டேன்; திரும்பி வீடுவந்து சேர்ந்து சந்தேகத்திற்கு இடமில்லாமல் படுத்துக்கொண்டேன்; பொழுது நன்றாய் விடிவதற்குள் ஸ்நானத்திற்குப் புறப்பட்டேன்; ஆற்றைக் கண்டதும் பிராணனைப் போக்கிக்கொள்ளக்கருதிக் கால்களிலும் இடுப்பிலும் துணியை இறுக்கிக்கொண்டு கங்கையம்மனிடம், "நீதான் காப்பாற்ற வேண்டும்' என்று முறையிட்டுக்கொண்டே விழுந்தேன்; பிறகு தமது கையிலிருக்கிறேன்; இது சுவர்க்கமோ? பூமியோ?'' கனவோ ஒன்றும்

தெரியவில்லை; என்று வெகு சிரமத்துடனும், வெட்கமும், துக்கமும் மேலிடச்சொல்லி முடித்தாள். உடனே நான், "என் கண்ணே! அழகிலும், செல்வத்திலும், படிப்பிலும், குணத்திலும் உன்னிலும் கேவலமான என்மேல் உன் ஆசைப் பயிர் பயிர்செய்யப்பட்டது: நீ என்மேல் இவ்வளவு பிரியம் வைத்திருக்க நான் சும்மாயிருப்பது தர்மமல்ல? இருவரும் சுகமாய் வாழ்வோம் உன் தந்தையின் உத்திரவு கொண்டுவா" என்று சொல்லி, அவள் ஆசைப்பட்ட ஆலிங்கனத்தை யுதவி முத்தமிட வாரம்பித்தேன்.

ஐயோ! கைக் கெட்டிய கனி வாய்க்கெட்டவில்லை; ஒருவர் மேல் ஒருவர் கொண்ட காதலால், மெய்மறந்து, ஆற்றிலிருக்கிறோம் என்ற நினைவு மழிந்து சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்க சமயம் எங்களை தேடிக்கொண்டு ஒரு சுழல் வந்ததுபோலும்; 'காதலர்களே! உங்களுக்கு இன்னும் மணவினை முடியவில்லை யாகையால் ஒருவரை ஒருவர் நினைவுடன் தழுவி முத்தமிட்டுக் கொள்வது சரி அல்ல; என்று சொல்லித் தடுப்பதுபோல, எங்களைப் பிடித்துத்தள்ள ஆரம்பித்தது; நான் அயர்ந்துபோ யிருந்தாலும் மனோவேகத்துடன், "அலமு! அலமு!! பயப்படாதே! என்னைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்! கரையில் கொண்டுவந்து சேர்க்கிறேன், பயப்படாதே!" என்று கூவினேன். 'என் காதலா! என் கணவா! கந்த நாதா!! என்னால் நிற்க முடியவில்லையே' என்று கத்தின அலமேலுவைப் பார்த்தபோது அவள் இரண்டடி அப்பால் இருந்தாள்; எங்களைப் பிரிக்கவென்றே வந்த சுழலானபடியால் நான், 'அலமு! அலமு!' ஓலமிட, அவள், 'நாதா! பிராண நாதா! கந்த நாதா!' என்று ஓலமிட, எங்கள் ஓலங்களைக் காதில் போட்டுக்கொள்ளும் சிரமத்தையும் எடுத்துக்கொள்ளாது, சுழல் இழுத்துத் தள்ளியது. என் மனம் ஆகா! எப்படிப் பதைத்ததோ அதைச் சொல்லால் விளக்க எனக்குச் சாமர்த்தியம் இல்லை.

(இன்னும் வரும்)

நீங்கள் ஆனந்தமாக பொழுதுபோக்க விழைந்தாலும், பிரபஞ்ச விநோதங்களைக்காண விரும்பினாலும், கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கவேண்டுமானாலும், நமது விவேக பாநுவை வாங்கி வாசியுங்கள்.

வறுமையின் பெருமை

T. T. M. மணி எழுதுவது

பெருமை பொருந்திய வறுமை யென்னும் கொடிய பகைவனை எதிர்த்துப் போர் புரிய சக்தியிலாது தவிக்கும் தேசம் நம் இந்து தேசமேயாகும். வறுமையைப் பெருமையாகக் கொண்டுள்ள நம் இந்து தேசத்தில் நமது சகோதரர்கள். அடையும் சிறுமையும் செப்பத்தரமன்று. இவ்வறுமையெனும் கள்வனின் சாட்டையடி பொறுக்கொணாது மக்கள் அலருகின்றனர். கண்ணீர் விடுத்துக் கதறுகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் அந்நிய நாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் செல்லத் தயாராகவுமிருக்கின்றனர். இவ்வருமையாளர்களில் இன்னும் அநேகர் அருமை பெருமை பொருந்திய இந்நாட்டையும், தம் உறவினர்களையும் விட்டுப்பிரிய மனமிலாது தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர். அந்தோ! வறுமையே நின்பெருமைதானென்னே? மக்களைச் சீரழிக்கும் நின் சிறுமைதானென்னே? ஏழை மக்களை ஏனோ இங்ஙனம் துன்புறுத்தல் வேண்டும்? ஏழை இந்தியர்களின் பாற்றானோ நின் சக்தியை காண்பித்தல் வேண்டும்? பலமிலாதவனை எதிர்ப்பதோ பலவானின் சமர்த்து? நன்று! நன்று! கொழுத்த முதலாளிகளிடம், பணக்காரர்களிடம் நின் பெருமையை, அபார சக்தியைப் பிரயோகப்படுத்தாது ஏனோ ஏழைகளைக் கண்ணீர் பெருகச் செய்கின்றனை? ஏழை அழுதகண்ணீர் வீணாகாது. அக்கண்ணீர் நின் பெருமையையும், வாழ் நாளையும் சிதைத்தேதீரும்.

நீர்வளம் நிலவளம் பொருந்திய நம் இந்து தேசம் வறுமைப்பிணியால் கட்டுண்டுழல்வதற்குக் காரணம் என்னென்பதைப் பற்றி சிறிது ஆராய்வாம். ஒரு தேசம் செழிப்புற வேண்டுமாயின் கைத்தொழில் பெருகவேண்டும். சிறப்பற்ற கைத்தொழில் பெருகவேண்டும். சிறப்புற்ற கைத்தொழில் பெருகின் அந்நாட்டு, மக்கள் சுகவாழ்வு வாழ்வரென்பதில் ஐயமில்லை. பொதுமாந்தர்களின் சுகவாழ்வாகிய மூலஸ்தானம் (கைத்தொழில்) பெரும்பான்மை நசித்துவிட்டது. இத்தகைய அருமையான கைத்தொழில் நசிப்பதற்குப் பூரண ஆதரவளித்தவர்கள் இராஜாங்கத்தாரேயாவர். ஒரு கைத்தொழில் செழிப்புறுவதும், நசித்துப்போவதும் அரசாங்கத்தின் கையிலிருக்கின்றது. ஒரு நாட்டில்

கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளைச் செழிப்புறச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கம் நமது நாட்டின் கைத்தொழில், வியாபாரம் முதலிய விஷயங்களில் நன்மை செய்யாமற் போயினும், தீமைசெய்யாமலிருந்திருப்பின் அதுவே நமது நாட்டிற்கு நன்மை செய்ததாகும். அதை விட்டு, நம் நாட்டு கைத்தொழில்கள் நசித்துப் போவதற்கு எத்தகைய தீவிர முயற்சியெடுத்து நமது நாட்டை வறுமை நாடாக்கி விட்டார்கள். நமது நாட்டில் வறுமை ஏற்பட்டதற்குக் காரணம், கைத்தொழில், வியாபாரம் நசித்ததற்கு காரணம் அரசாங்கம் பூரண ஆதரவளிக்காது பாராமுகமாயிருந்ததேயாகும்.

அதிகார பலத்தால் இந்நாட்டை அடக்கியாண்டுவரும் அரசாங்கம் இவ்விஷயத்தில் தீவிர முயற்சி யெடுத்திருப்பின் நம் நாடு இத்தகைய கேவலமான நிலைக்கு வந்திருக்க முடியாது. வறுமை யென்ற கொடியபேய் நம் நாட்டைவிட்டு வெகுகாலத்திற்கு முன்னமே சென்றிருக்கும். பசியின் கொடுமைத் தாங்கொணாது. ஆயிரக் கணக்கான மக்கள் கண்ணீர் பெருக்குவதற்கும், பட்டினியால் வாடி வதங்குவதற்கும் காரணஸ்தர் அரசாங்கத்தாரேயாவர்.

இனி இவ்வறுமைப் பிணி நம் நாட்டைவிட்டகல்வதற்கு நாமென் செய்தல்வேண்டும்? என்பதைப்பற்றிச் சிறிதாராய்வோம். தன்கையே தனக்குதவி என்றபடி, இனியாவது நாம் அன்னியரை நம்பாது நமது நாட்டின் பொருளாதார நிலைமையை பெருகுவதற்கு, மஹாத்மாஜி அவர்கள் கூறியுள்ளபடி ராட்டினம், நெசவு ஆகிய கைத்தொழில்களை நம் நாட்டில் பிறந்த ஆண் பெண் ஆகிய இருபாலரும் கைப்பற்றல் வேண்டும். இத்தொழில்களை நம் நாட்டில் பரப்புவதற்கு பணக்கார முதலாளிகள் முன் வந்து வேண்டிய உதவி செய்தல் வேண்டும். பணம் படைத்த கனவான்கள் மனம் வைத்தால் நம் நாட்டுப் பொருளாதார நிலைமையைப் பெருக்கலாம். நம் நாட்டில் தலை விரித்தாடும் வறுமையின் பெருமையைக் குலைக்கலாம். நம் நாட்டு மக்கள் அன்னிய நாடுகளுக்குச் செல்வதைத் தடுக்கலாம். நம் நாட்டுப் பெண்மணிகள் நீரூற்றுப் போல வடிக்கும் கண்ணீரை நிறுத்தலாம்.

பணம் படைத்த பெரியோர்களே! கனவான்களே! நீங்கள் பிறந்து வளர்ந்த நாடு, அருமை பெருமை பொருந்திய நிங்கள் தாய் நாடு, தெய்வீகத் தன்மைபொருந்திய நீங்களின் பரதநாடு, இருக்கும் நிலைமை உன்னிப் பாருங்கள்! உங்கள் நாட்டில் பிறந்து உங்கள் நாட்டிலேயே வளர்

ந்த, உங்கள் அருமைச் சகோதர சகோதரிகள் வடிக்கும் கண்ணீரைத் திரும்பிப் பாருங்கள்! உங்களின் அருமைச் சோதர சோதரிகள் படுந் துன்பத்தைப் பார்த்து வாளாவிருப்பது தர்மமா? பாடுபட்டுத்தேடி பணத்தைப் புதைத்து வைப்பதால் வரும்பயன் யாது? அருமையாகத் தேடியபணத்தை அருமையான வழியில் செலவழிக்க ஏனோ தயங்க வேண்டும். இனியாவது நம் நாட்டை அலக்கழித்து ஆட்டிவரும் வறுமையென்னும் கொடியபேயை உங்கள் பணமென்னும் சாட்டையால் அடித்துத் துரத்தி, நம் நாட்டின் பொருளாதார நிலைமையைத் திருத்தி ஏழைமக்களைக்காப்பாற்ற முன் வருவீர்களாக. (தே-நா)

கடிதங்கள்

"விவேகபாநு" ஆசிரியர் அவர்கட்கு

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் ஆர்வமுடன் அனுப்பிய "விவேகபாநு" பத்திரிகைகள் வந்தன. பார்த்து மகிழ்ந்தேன். பத்திரிகையின் அமைப்பு மிகவும் நன்றாக விருக்கிறது. விஷயங்களும், மனவெழுச்சியும், புதிய அறிவும் தாத்தக்கணவாக விருக்கின்றன. தங்களுடைய ஊக்கம் ஒன்றே துணையாக எதிர்காலத்தில் மிகவும் அபிவிருத்தி யடையும் என நம்புகிறேன்.

ஸ்ரீகாசி
16—8—28

தங்களன்புள்ள,
B. ஆதிமூர்த்தி.

"விவேகபாநு" ஆசிரியர் அவர்கட்கு

அன்பீர்!

தாங்கள் நம் வாசகசாலைக்கு மனமுவந்து அனுப்பிய "விவேகபாநு" முதல் மாலையின் மூன்று மலர்களும் வரப்பெற்றோம்; நம் தமிழ்

மக்களது அஞ்ஞான அந்தகாரத்தைப் போக்குவதில் இப்பத்திரிகைக்குரிய பெயர்த் தரும் எனக்கற்றோரும் மற்றோரும் களிகூருமாறு செவ்விய தமிழ்ச்சுவை ததும்பும் பல சீரிய வியாசங்கள் மிகமலிந்து மிளிர்கின்றன: அருங்கலைத் தவழும் அறிஞர்கள் பல்லோர் பெருந்துணைப் பெற்றுப் பிறங்குகின்றன: ஆகலின், இத்துணைச் சிறப்பினை யுடைய விவேகபானுவை நமது செந்தமிழ்நாட்டுச் செல்வர்களொவ்வொருவரும் அவசியமாகக் கொண்டு முன்னேற்றமடையவேண்டு மென்றும், இப்பத்திரிகைக் குன்றுதலின்றிக் குன்றின்மேலிட்டத் தீபமென வெத்திசையும் பரந்தொளிர்ந்து நீடித்து வாழவேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனையிறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு

சென்னை
1—9—28

க. விஸ்வலிங்கம்
காரியதரிசி
பால்யநாயனுர் சங்க இலவச வாசகசாலை
வண்ணாரப்பேட்டை, சென்னை.

"விவேகபானு" சிறப்புரை

வி	த்தியா போதினி களுக்குள் நல்	வி
வே	கங்களை யூட்டி அறிவையீட்டி அவிவி	வே
க	ங்களை யோட்டி இகபர வீட்டின்	க
பா	டங்களைத் திறந்து இருளொழிந்து ஞான	பா
நு	வாய் விளங்குவதில் விவேகபானு	நு

இராஜாப்பாளையம்
29—8—28

T. C. நல்லப்ப கண்டியர்,
S. M. & V. P. M.

தாம்பூல தாரணம்

(டாக்டர் அஹ்மத் எழுதுகிறார்)

பற்களினிடுக்குகளிலிருந்து பல காரணங்களால் சீழ் வடிகின்றது. இந்தியா ஸம்பந்தப்பட்டவரை இவ்வியாதி அதிக வியாபகமுடையதா யிருப்பதற்கு ஜனங்கள் தாம்பூல தாரணம் செய்து கொள்ளும் வழக்கமே முக்கிய காரணமாகும். இந்த வழக்கத்தை அப்பியஸித்துக் கொண்டிருக்கும் படித்த இந்தியர்களுள் பெரும்பாலோர், தாம்பூலத்தின் துவர்ப்பான இலையும், துர்நாற்ற மகற்றும் வஸ்துவும் "ஆல்கலி"யும் சம்பந்தப் பட்டிருப்பதால் ஜீரண சக்தியைப் பெருக்குவதற்கு அஃது உபயோகமானதென்றும், அதைக் கிரமமாக உபயோகித்து வந்தால் சரீரம் ஆரோக்கிய மடைகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், கிலிப்தமாகத் தாம்பூல தாரணம் செய்துகொள்ளுகிறவர் 30-வது வயதில் அனேகமாக அஜீரண வியாதியால் அவஸ்தைப் படுவதிலிருந்தும், அவர்களுடைய பற்களினிடுக்குகளிலிருந்து சீழ் வடிய ஆரம்பித்து விடுவதிலிருந்தும் மேலே சொன்ன அபிப்பிராயத்திற்கு ஆதாரமில்லை யென்பதைச் சுலபமாக ருஜுப் படுத்தலாம். என்னுடைய சிகிச்சைக்கு வந்த ஆயிரக்கணக்கான கேஸ்களில் இந்தப் பழக்கத்தால் ஏற்பட்டு வரும் கெடுதல்களை நேரில் நான் பார்த்திருக்கிறேன். ஆதலின், என்னுடைய சகோதரப் பிரஜைகளுக்கும், என்னுடைய சகோதர வைத்தியர்களுக்கும் எச்சரிக்கை செய்யவேண்டியது அவசியமென்று நான் நினைக்கின்றேன். வாய் நாற்றத்தை அகற்றுகிறதென்பதையும் அதை உபயோகிப்பதால் வேறு செயற்கை முறையால் உதட்டுக்குச் சாயமேற்றிக்கொள்ளவேண்டிய அவசியம் ஸ்திரீகளுக்கு ஏற்படாமல் செய்கிறதென்பதையும் தவிர அதில் வேறு எவ்வகைக் குணமுமில்லை. துவர்ப்பான வெற்றிலையில் சிறிது கத்தக்காம்பை வைத்து, சுண்ணாம்பைத் தடவிப் பாக்குத்துண்டுகளையும் லவங்கத்தையும் வைத்துச் சுருட்டி, போஜனத்திற்குப் பிறகு போட்டுக் கொள்ளுவது வழக்கமாக இருக்கிறது. புகை குடிப்பதுபோல் இதுவும் ஒரு வழக்கமாக ஏற்பட்டு பலர் தினம் 100-முதல 200-தடவை வரையில் தாம்பூலம் போட்டுக் கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். இதன் பலனாகத் தாம்பூல தாரணம்

செய்வோர் வாயில் ஒன்றுமில்லாமலிருக்கும் பொழுதே வாயூறலை (உமிழ்நீரை) உண்டுபண்ணி விடுகிறார்கள். இதனால் ஏராளமான வாயூறலானது வியர்த்தமாகப் போய்விடுகிறது. இதனால் அதற்கு ஏற்பட்டுள்ள கிரமமான வேலைகளை அது செய்வதற்கில்லாமற் போய்விடுகிறது. வெற்றிலையின் நரம்புகளும் பாக்குத் துண்டுகளும் பற்களி னிடுக்குகளில் சிக்கிக்கொண்டு, வாவரப் பற்களினிடுக்கி லிருக்கும் ஈரானது மேலே தேய்ந்து இறங்கி வந்து விடுகிறது. இதனால் பற்களினிடுக்குகளில் பைகள் ஏற்பட்டு, அவைகளில் பாக்கு வெற்றிலைகளின் துண்டுகள் மணிக்கணக்காகவோ நாட்கணக்காகவோ தங்கி விடுகின்றன. இதனால் எரிச்சல் ஏற்படுகிறது; இவ்விதம் அடிக்கடி ஈற்றில் எரிச்சல் ஏற்படுவதால் ஈற்றோரங்களில் அயற்சி யுண்டாகிச் சீழ்வர ஆரம்பித்து விடுகிறது. தாம்பூலதாரணம் செய்துகொள்ளும் சிலர் புகையிலையிலிருந்து தயார் செய்யப்படும் "ஸ்ர்தா" என்பதையும் உபயோகிக்கிறார்கள் இந்தப் புகையிலை சம்பந்தப்பட்ட வஸ்துவானது வாயின் மிருதுவான தசைகளுக்கு எரிவை உண்டுபண்ணுகிறது. தாம்பூலத்தையும் ஸர்வத்தையும் அடிக்கடி உபயோகிப்பவர்களுக்கு நாக்கில் ருசி இருப்பதில்லை. இதனால் தாம்பூலத்தைத் தவிர வேறு எவ்வித ஆகாரமும் இல்லாமல் பல தினங்களைத் தள்ளக்கூடிய நிலைமையை அவர்கள் அடைந்து விடுகிறார்கள். வெற்றிலையிலிருக்கும் சுண்ணாம்பையும் அவர்கள் விழுங்கிவிடுகிறார்கள். இதனால் சில மாதங்களில் சரீரத்தில் சுண்ணாம்பு அதிகமாகச் சம்பந்தித்து, அது திரவமாக வாயூறலுடன் வந்து, "கால் குலஸாக" (சுண்ணாம்புக் காரையாகப்) பற்களில ஏராளமாகத் தங்கிவிடுகிறது. ரத்தக் குழல்களில் சுண்ணாம்பு சம்பந்தம் அதிகரித்து "ஸெருமய்ட்டார்ட்டாராக" அது பற்களுக்கு வந்து சேருகிறது: இவ்விதம் சரீரத்தில் சுண்ணாம்பு அதிகம் சம்பந்திக்கும்படி செய்வது வாயூறலின் தன்மையையே மாற்றிவிடுகிறது: வாயூறல் "கால்குலஸைப்" பாகுபாடு செய்து பார்த்ததில், அதில் 22 ஜலமும், இந்திரிய வஸ்துக்களும், 78 அனிந்திரிய வஸ்துக்களும் சேர்ந்திருப்பதாகத் தெரிகின்றன:

திருத்தாம்பூலத்தை அதிகப்படியாகப் புசிப்பது "குளோபுலின்களை" அதிகமாக ரத்தத்தில் உண்டுபண்ணுகிறதென்றும், அவைகள் அதிகரித்து விடுவதால் அழிவு பதார்த்தங்கள் "கால்ஷிய உப்புக்களுடன்" வெளிப்படுகின்றன வென்றும், அவைகள் வாயில மிருதுவான பதார்த்தமாகச் சேர்ந்து பிறகு "கல்லாயிட்" வஸ்துக்கள் அழுகிப்போவதால் கெட்டிப்படுகின்றன வென்றும் டாக்டர் பிளாக் ருஜூப் செய்திருக்கிறார்;

(இன்னும் வரும்) ஆ-தீ;

:: செய்தித் திரட்டு ::

குரங்குக்குட்டியைப் பெற்றவள்

பம்பாய்க்குச் சமீபத்திலே ஒரு ஸ்திரீ ஒரு குரங்குக்குட்டியைப் பெற்றனள். பின்னர் அக்குட்டியை கொலைசெய்யப்பட்டது. தாய் சுகமுற இருக்கின்றாள்.

* * * *

நாய் இறந்தமைக்காகத் தற்கொலை செய்தவர்

இங்கிலாந்திலே போர் வீரராகயிருந்த அறுபத்துமூன்று வயதுடைய 'பாட்ரிக் ஒநீல்' என்பவர் தனது அருமைநாய் இறந்த துயரத்தைச்சகிக்க முடியாமல் தற்கொலை புரிந்துகொண்டார்.

* * * *

பலபாஷாப்பத்திரிகைகளைப் பிரசுரிக்கும் தேசம்

உலகிலேயே எகிப்தின் தலை நகரமான கெயிரோவிலேதான் மிகுதியான பத்திரிகைகள் வெளியாகின்றன. இங்கே அரபுபாஷையில் 12-பத்திரிகைகளும், பிரஞ்சு மொழியில் 8-பத்திரிகைகளும், ஆங்கிலத்தில் 2-பத்திரிகைகளும், கிரேக் பாஷையில் 7-பத்திரிகைகளும், பிற பாஷைகளில் இன்னும் 6-அல்லது 7-பத்திரிகைகளும் நடைபெறுகின்றன.

* * * *

நூறு வயதுக்குமேல் கலியாணஞ் செய்தவன்

தென்னாப்பிரிக்காவிலே நூறு வயதிற்கு மேலான ஒருவனும், தொண்ணூற்றைந்து வயதுக்கு மேற்பட்ட நால்வரும் கலியாணஞ்செய்துக்கொண்டார்கள். 85-வயதுக்கு மேற்பட்ட மணப்பெண்கள் மூவர் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தாரால் வெளிப்படுத்தப்பட்ட கலியாண கணக்கு அறிக்கையில் இவை காணப்படுகின்றன.

* * * *

கும்பாபிஷேகம்

ஸ்ரீகௌரீ மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகா சமேத ஸ்ரீ மாயூரநாத சுவாமிக்கு மஹா கும்பாபிஷேகம் விபவஹு ஆவணிமீ 18உ (2-9-28) ஆதிவாரம் கும்பாபிஷேக மகோற்சவ வைபவம் வெகு சிறப்பாக நடைபெற்றன.

* * * *

சர்மிஷ்டாதேவி

மாஜி இந்தூர் மகாராஜாவின் மனைவியான சர்மிஷ்டா தேவியை லண்டன் டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகா நிரூபர் பேட்டிகண்டபோது, அவ்வம்மையார் "இந்து மதத்தைச் சேர்ந்ததால் நான் கிறிஸ்து வேதத்தைக் கைவிட்டதாகநீர் நினையாதேயும் நான் அதை ஒருபோதும் கைவிட்டேனல்லன்" என்று கூறினாராம்.

154

:: மதிப்புரை ::

* மநுநீதி சதகம்

நூலாசிரியர், திருவெண்ணெய் நல்லூர், உயர்திரு - இராசப்ப உபாத்தியாயரவர்கள். இதன்விலை அணா-8. கிடைக்குமிடம் ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, பார்க்டவுன், சென்னை.

அநேக ஆண்டுகட்குமுன் வெளிப்போந்த மநுநீதி சதகம் என்னும் இவ்வரிய நீதிநூல் இது போழ்து ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலையார், ஸ்ரீமான்-அ, மஹாதேவ செட்டியாரவர்களைக் கொண்டு செய்யுட் சந்தங் கெடாதவாறு சந்தி பிரித்து புதிய முறையில் அமைத்தெழுதப் பெற்று வெளியிட்டிருப்பது மிகம் பாராட்டத் தக்கது!

இந்நூல் அருள் வடிவமான பழமலை நாதர்மேல் துதியாகப் பாடப்பெற்றிருப்பதுடன், ஒவ்வொரு செய்யுளிலும் அநேக நீதிவிஷயங்கள் அமைந்திருக்கின்றன. நாம் இந்நூலை வாசிக்கும்போது சில விஷயங்கள் ஆட்சேபகரமாகத் தோன்றிற்று. அங்ஙனமே, இந்நூலை வாசிக்கும் அன்பர்களுக்கும் ஆட்சேபகரமாகத் தோன்றலாம். குற்றத்தைக் கண்டு வருந்தும் மக்கட்கு, குற்றத்தை நீக்கிக் குணமுளவற்றைக் கடைப்பிடிக்குமாறு நாயனுர் "குணநாடிக் குற்றமு நாடியவற்றுள்; மிகைநாடி மிக்க கொளல்" என்று கூறியுளதால், இந்நூலைப்பாவது, நூலாசிரியரையாவது குறைகூறுது இந்நூலைப் படித்துப் பயன் பெறுதல் மக்கள் கடமையாகும்.

ஸ்ரீராமிர்த பக்திரசக் கீர்த்தனங்கள்

இயற்றியவர் ஸ்ரீமான், கயிலாச சுந்தரசுவாமி என்ற மு. பொ. தங்கையா அவர்கள்: 'இதன் விலை அணா-6. கிடைக்குமிடம், கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்.

இது பஜனை கோஷ்டியார்களுக்குப் பயன்படுமாறு இராகதாளங்களுடன், நூதன பலவர்ண மெட்டுகளில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

---

* மநுநீதிசதகம் மது "விவேகபாநு" ஆபீசில் கிடைக்கும். அணா-8. வேண்டுவோர் எழுதுக.

அன்னபூரணுலயம்

இதன் ஆசிரியர், திருவாங்கூர், கெவர்மெண்டு தலைமை மொழி பெயர்ப்பாளர்ஸ்ரீமான் டி. இராமலிங்கம் பிள்ளை M.A.அவர்கள். இதன் விலை ரூபா 1. கிடைக்குமிடம், ஸ்ரீமான்-ஆர். எஸ். கந்தபிள்ளை, காந்தாரி யம்மன் தெருவு, திருவனந்தபுரம்.

இன்பச்சுவை ததும்பும் இந்நவீனமானது வங்கமூத நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும். மக்கள் மனதைக் கெடுக்கும் தற்கால கற்பனலங்கார கதைகளைப்போல ஆபாச முறையில் எழுதாமல், படிப்போர்மனதைப் பக்குவப்படுத்தி, நன்னெறியிலீடுபடச் செய்யுமாறு இனியசெந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. சுருங்கக் கூறு மிடத்து இந்த "அன்னபூர்ணுலயம்" என்ற நவீனம் மக்கட்குப்போதிய அறிவை யளிக்குமென்றே சொல்லல்வேண்டும். ஆகலின், இந்நூலைத் தமிழ் மக்கள் ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

இந்தியன்

இதன் ஆசிரியர்:—கே. வெங்கடராவ் அவர்கள். இதன் வருடச்சந்தா உள் நாட்டிற்கு ரூபா 2-0-0 வெளிநாடுகளுக்கு ரூபா 2-4-0 கிடைக்குமிடம், இந்தியன் ஆபீஸ், அதமன் கோட்டை போஸ்டு,சேலம் ஜில்லா.

இது ஓர் தமிழ் மாதப் பத்திரிகை. இதன் முதலிதழ் நம் பார்வைக்கு வரப் பெற்றோம். இதில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கான பல விடயங்கள் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் தமது நோக்கத்தில் அடிமை இந்தியன் சகல உரிமைகளையும் பெற்ற உண்மை சுதந்திர இந்தியனாக வேண்டின், அவன் செய்யவேண்டிய கடமைகள் யாது? சுதந்திரம், தேசபக்தி, குடியரசு முதலியனயாவை? பெண்ணுரிமை, நாட்டுரிமை, மக்கள் சம உரிமை என்பனவற்றை விளக்கி பாரதப் புதல்வர்கள் உய்யும்வகை தேடிச் சிறிதேனும் சளைக்காது போராடும் வீர விளக்கென 'இந்தியன்' பிரகாசிக்குமாறு பாடுபடுவோம்" என்று விளக்கிக் காட்டி யிருக்கின்றார். ஆகவே, சுதந்திரத்தைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க விரும்புகிறோம்.

ஜனமித்திரன்

இது சென்னையிலிருந்து வெளிவரும் ஓர் மாதப்பத்திரிகை, வருடச் சந்தா ரூபா 1-0-0 கிடைக்குமிடம், ஜனமித்திரன் காரியாலயம், திருவல்லிக்கேணி, சென்னை.

இஃது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் நோக்கத்துடன் கூடிய ஓர் தேசிய மாதப்பத்திரிகையாகக் காணப்படுகின்றது. நம் பார்வைக்குக் கிடைத்த முதல் பத்திரிகையில் "யார் சட்டசபை அங்கத்தினரா யிருக்கவேண்டும்? மதுவை ஒழிப்பதற்குவழி, நாம் நமது நாட்டைப் பாதுகாக்க முடியாதா? ஆப்கன் தேசத்தில் நடைபெறும் விவகாரங்கள், ரஷ்யா அரசாங்சத்தாரின் ஆகாயப்படை, ஜெர்மனியில் சட்டசபை அங்கத்தினர் நியமனம், சைகிலில் செல்லுதல்" முதலிய விஷயங்கள் காணப்படுகின்றன.

இதிற் காணப்படும் ஒவ்வொரு விஷயமும் மக்கட் கூட்டத்திற்கு இன்றியமையாதனவாகும். மேலும், இப்பத்திரிகை ஏழை யென்றும், பணக்காரரென்றும் வித்தியாசம் பாராட்டி பாரபட்சத்துடன் உழைக்கும் நோக்கமல்லவென்று நம்முன்னிருக்கும் பத்திரிகை தெற்றென விளக்குகின்றது. பணக்காரர்களின் சுயநலத்தை எடுத்துக்காட்டி, ஏழைமக்களின் வறுமையைப் போக்கவே இது பெரிதும் பாடுபடுமென்று நம்புகிறோம். ஆகவே, இம்மித்திரனுக்கு எல்லோரும் நல்லாதரவளிக்க வேண்டுகிறோம்.

சிவநேசன்

சிவநேசர் திருக்கூட்ட ஆதரவு பெற்றுத் திகழும் ஒரு சிறந்த வாரப் பத்திகை. ஆசிரியர்:—உயர்திருவாளர். இராமசாமிச் செட்டியாரவர்கள். வருடச்சந்தா உள்நாடு ரூபா 3, வெளிநாடு ரூபா 4. கிடைக்குமிடம்: சிவநேசன் காரியாலயம், பலவான்குடி இராமநாதபுரம் ஜில்லா.

சிவநேசன் இரண்டாவதாண்டின் இதழ்கள் நம் பார்வைக்கு வரப்பெற்றனம். நேசன் தன் முதலாண்டைப் பூர்த்தி செய்து இரண்டாவதாண்டில் புகுந்தமையால், உருவத்திலும், உளத்திலும், பெருத்தும், சிறந்தும் தோன்றுகின்றன.

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானின் பெயரைத்தாங்கி வெளிவரும் இவ்வினிய செந்தமிழ்ப் பத்திரிகையின் வளர்ச்

சிக்கும், அபிவிருத்திக்கும் நாம் பெருமகிழ் வெய்துகின்றனம். தெய்வ பக்தி குறைந்தும், சமயவாதம் பூத்தும், தமிழ்மொழி வளர்ச்சி குன்றியும் இருக்கும் இற்றைய நாளில் சிவநேசன் தோன்றி சிறந்த பணியாற்றி வருதலை அன்பர்கள் ஆதரித்து நேசன் நாளுக்கு நாள் பெருகி வளர்ந்து அபிவிருத்தி அடையுமாறுசெய்வார்களென்றுநம்புகின்றனம்.

கம்மபாலன்

இஃதோர் இனிய செந்தமிழ் மாதப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் ஆர். வெங்கடசாமி நாயுடவர்கள். வருடச் சந்தா உள்நாடு ரூபா 1-0-0 வெளிநாடு ரூபா 1-4-0 கிடைக்குமிடம்: பத்திராதிபர், கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல், சிவகாசிமார்க்கம் .

இப்பத்திரிகையின் மூன்றாவதாண்டின் 1-2, இதழ் நம்பார்வைக்குக் கிடைக்கப் பெற்றனம். இது கம்மகுல மக்களின் முன்னேற்றத்தை கருதி உழைக்கும் சிறந்த பத்திரிகையாகக் காணப்படுகின்றதாயினும், பலபொது விஷயங்களும் மிளிர்கின்றன. கம்ம குலத்தினர் ஏகமனத்துடன் பாலனை ஆதரித்தல் முக்கிய கடமையாகும். பொதுவாக குல வித்தியாசம் பாராட்டாமல் ஏனையோரும் பாலனைப் படித்து இன்புறுமாறு கேட்டுக்கொள்கின்றனம்.

வாராந்தம்

இதன் ஆசிரியர், சிறந்த தேசபக்தர் தஞ்சை நா. நடராஜன் அவர்களாவர். இதன் வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூபா 4-0-0 வெளிநாட்டிற்கு ரூபா 5-0-0 கிடைக்குமிடம்: மானேஜர்;— வாராந்தம் ஆபீஸ் நெ. 146. பிராட்வே, சென்னை.

இஃதொரு புதிய வாரத் தமிழ் பத்திரிகை. இதன் முதல் வருடத்தின் சில இதழ்கள் நம் பார்வைக்கு வரப்பெற்றோம். இதில் நாட்டின் முன்னேற்றத்திற்கான பலதுறைப்பட்ட கட்டுரைகள் சிறந்த அறிஞர்களால் எழுதப்படுகின்றன. அடிமை இந்தியா விடுதலை யடைய வேண்டுமாயின், அதற்குச் சிறந்த கருவி பத்திரிகைகளேயாகுமாதலின், இச் சிறந்த தேசிய பத்திரிகையை மக்கள் ஆதரித்து அதனாலாய பயனை யடையவேண்டுவதோடு, இப்பத்திரிகை நீடு நின்று வாழ ஆண்டவனருள் புரிவாராக.

குடியரசு

இதன் நிர்வாகாதிபர் உயர்திருவாளர், ரா. கணபதியவர்கள். பொருப்பாளர் திருமிகு-அ. பழனூர் அவர்கள். இதன் வருடச்சந்தா உள்நாடு ரூபா 4-0-0 வெளிநாடு ரூபா 5-0-0 கிடைக்குமிடம்: குடியரசு பத்திரிகாலயம், 204. மாதாகோவில் வீதி, காரைக்கால்.

இப்பத்திரிகை வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவதாகும். இதன் ஆறுவதாண்டின் 1, 2 இதழ்கள் நம்பார்வைக்கு வரப்பெற்றோம். தர்மமே ஜெயமென்பது குடியரசின் சீரிய கொள்கையாகக் காணப்படுகின்றன. உண்மை அறத்தின் வழியைப் பின்பற்றியுழைப்பதே இப்பத்திரிகையின் முழுநோக்க மாதலின் பாரதஜனசமூகம் ஏற்று ஆதரிக்குமாறு வேண்டுவதுடன், இப்பத்திரிகை ஆண்டாண்டு மினிது செழித்தோங்கி வளருமாறு இறைவனை இறைஞ்சுகின்றனம்.

வியாபாரிளுக்கோர் விண்ணப்பம்!

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பினாங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கும் ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூபா	8	0	0
,, அரைப்பக்கத்திற்கு	ரூபா	5	0	0
,, கால்பக்கத்திற்கு	ரூபா	3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்ட வேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்குச் சகாயஞ் செய்யப்படும்.

மானேஜர்—"விவேகபாநு" ஆபீஸ்,

நெ. 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து,

சௌகார்பேட்டை, சென்னை.

விடுகவி வினா?

இலக்கம் - 3. புதுவைக்கிழார்.

செந்தமிழ்சேர் நான்கெழுத்திற் சேரும் வார்த்தை
செப்பிடுவே ரதன்பொருளு மிசைக்கரு வியென்றே
முந்துறநின் முதலோடு மிரண்டும் நான்கு
முடிந்திடிலோ வோவியமென் றறைவர் மேலோர்
நந்துதலின் முதன்மூன்று முடியுங் கூடின்
னரைநிறத்துக் கொக்கென்றே யாகு முண்மை
பைந்தமிழ்நற் கவியின்பஞ் சுவைக்கு மேன்மை
பகர்ந்திடுமி னிதன்பொருளைப் பண்புள் ளோரே.

குறிப்பு:— இவ்விடுகவி வினவுக்கு விடை எழுதும் ஒவ்வொருவரும் "விவேகபாநு"வின் சந்தாதாரராகவே இருத்தல் வேண்டும். சந்தாதாரர் விடையெழுதும்போது விடையுடன் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிடல் வேண்டும். சந்தாதாரரல்லாதவர்கள் விடை எழுத விரும்பின் விடையுடன் இரண்டணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். கிடைக்கும் விடைகளைப் பரிசோதித்து சரியான விடைவரும் முதல் இருவருக்கு கீழ்க்கண்ட பரிசு அனுப்பப்படும்.

முதல்பரிசு மதனசிங்கர் என்ற நாவலும், இரண்டாவது பரிசு மர்மமுகி என்ற நாவலும் கொடுக்கப்படும்.

ஆசிரியர் தீர்மானிப்பதே முடிவானது, இது சம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகள் வைத்துக் கொள்ளப்படமாட்டா 25-10-28 க்குள் விடை நமக்குச் சேரும்படிச் செய்தல் வேண்டும். பரிசோதனைநாள் 30-10-38 ல்

நமது

"விவேகபாநு"வுக்கு

சந்தாதாரர்கள், விளம்பரங்கள்,

சேர்த்துக் கொடுக்க

எஜெண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விவேகபாநு பஞ்சாங்கம்

விபவவூ புரட்டாசிமீ

கலியுகாதி—5030, சாலிவாகன—1851, பசலி—1338,

ஹிஜ்ரி,—1348 கொல்லம்—1104.

இங்கிலீஷ் 1928 — செப்டம்பர், அக்டோபர்மீ

தமிழ் தேதி	இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	16	ஞாயி	துதி 4-12	அஸ் 2-21	நந்தவனம் வைக்க
2	17	திங்கள்	திரு 9-21	சித் 6-4	விநாயகர் சதுர்த்தி
3	18	செவ்	சது 10-12	சுவா 10-21	ரிஷிபஞ்சமி விரதம்
4	19	புதன்	பஞ் 15-16	விசா 17-20	விவசாய உற்பத்தி
5	20	வியா	சஷ் 20-42	அனு 23-46	சஷ்டி விரதம்
6	21	வெள்	சப் 25-21	கேட் 29-52	கிணறுவெட்ட
7	செப்டம்பர்மீ 22	சனி	அஷ் 29-23	மூல 35-19	மந்திரஞ் செபிக்க
8	23	ஞாயி	நவ 33-47	பூரா 40-56	கணிதாரம்பஞ் செய்ய
9	24	திங்கள்	தச 36-0	உத்ரா 44-43	வித்தியாப்பியாசம்
10	25	செவ்	ஏகா 37-29	திரு 47-29	சர்வ ஏகாதசி
11	26	புதன்	துவா 37-3	அவி 49-27	வியாபாரஞ் செய்ய
12	27	வியா	திர 36-41	சத 49-39	பூமிகொள்ள
13	28	வெள்	சது 34-14	பூர 48-23	அனந்தவிரதம்
14	29	சனி	○பௌ 30 50	உத்தி 47-17	உமாமகேஸ்வரிவிரதம்
15	30	ஞாயி	பிர 26-21	ரேவ 44-11	படர்செடிவைக்க
16	1	திங்க	துதி 21-23	அசு 40-51	கரிநாள்
17	2	செவ்	திரு 16- 4	பர 36-57	
18	3	புதன்	சது 10-11	* கிரு 32-51	
19	4	வியா	பஞ் 4-11	ரோ 28-57	
20	5	வெள்	சப் 52-41	மிரு 24-44	
21	6	சனி	அஷ் 47-17	திரு 21-4	
22	அக்டோபர்மீ 7	ஞாயி	நவ 42-25	புனர் 17-49	
23	8	திங்	தச 39-9	பூச 15-27	
24	9	செவ்	ஏகா 36-13	ஆயி 13-54	ஆயுதங்கொள்ள
25	10	புதன்	துவா 34-26	மகம் 13-14	முகூர்த்தநாள்
26	11	வியா	திர 33-56	பூரம் 24-21	பிரைதோஷம்
27	12	வெள்	சது 34-29	உத்ர 16-43	வீதை விதைக்க
28	13	சனி	அம 36-27	அஸ் 19-49	மாளய அமாவாசை
29	14	ஞாயி	பிர 39-21	சித் 28-41	கரிநாள்
30	15	திங்க	துதி 43-26	சுவா 28-57	கர்ணபூஷணம்
31	16	செவ்	திரு 48-23	விசா 33-49	யோகசா தனை செய்ய

	குரு	ராகு	செ
	1-மி-செ 4-து-பு 8 து-சு 21-வ-க்-பு		
	சனி கே		ரவி பு-சு

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS:
Editor—S. K. GOVINDASWAMY PILLAI.